Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.


முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 22 திங்கட்கிழமை (06.01.2014) பக்கங்கள் 20 ஓசை – 097

08



சம்பியன்

18



பலவீனம்

## முல்லை கடலில் தத்தளித்த இரண்டு ஆஸி. பிரஜைகள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் சாலை கடற்பரப்பில் நேற்றைய தினம் சிறிய படகொன்றில் தத்தளித்துக்கொண்டிருந்த அவுஸ்ரேலியப் பிரஜைகள் இருவர் காப்பாற்றப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.


காப்பாற்றப்பட்ட இருவரும் ஆரோக்கியமாக உள்ளனர். இது தொடர்பில் கொழும்பிலுள்ள அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகராலயத்திற்கு தகவல் தெரிவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையம் கூறியுள்ளது.

கடற்படையினரால் காப்பாற்றப்பட்ட அவுஸரேலியப் பிரஜைகள் இருவரும் முல்லைத்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு

19 ஆம் பக்கம் பார்க்க

## மாகாணசபையை திறம்பட நடத்த மத்திய அரசுடன் இணங்க வேண்டும்

### உண்மையை வெளிப்படுத்துகிறார் சித்தார்த்தன்



(கொழும்பு)

மத்திய அரசுடனான இணக்கப்பாடான செயற்பாட்டின் மூலமே மாகாணசபையை திறம்பட வழி நடத்த முடியுமென்பதுடன், பரஸ்பர புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்புகளுடனேயே செயற்படவேண்டுமென புளொட் தலைவரும் வடமாகாண சபை உறுப்பினருமான சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அண்மையில் சந்தித்துப் பல்வேறு விடயங்களைத் தெரிவித்திருந்தார். ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பு வரவேற்கத்தக்கது. ஆனால், ஜனாதிபதியும் வடமாகாண சபை விவகாரத்தில் முழுமையாக அக்கறை செலுத்தி அதன் சீரான செயற்பாட்டுக்கு உதவ வேண்டும்.

மாகாண சபையின் செயற்பாட்டை செயற்றிறமைமிக்கதாக மாற்றுவதுடன்

19 ஆம் பக்கம் பார்க்க

# போரை நிறுத்த மறுத்தமையே பிரபாகரன் உயிரிழக்கக் காரணம்



## என்கிறார் சிதம்பரம்

(சென்னை)

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது போரை நிறுத்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியது. இந்திய அரசு சொனனதைக் கேட்டிருந்தால் தற்போது விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் உயிரோடு இருந்திருப்பாரென இந்திய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

புதியதலைமுறை தொலைக்காட்சியில் இடம்பெற்ற நிகழ்சியொன்றில் பேசிய போதே அமைச்சர் சிதம்பரம் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இன்றைய இந்திய அரசியல் நிலை, ராஜீவ் படுகொலை, இலங்கை இறுதிக் கட்டப் போர் நிலவரம் பற்றிய பல கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

இலங்கையில் போர் நிறுத்தப்பட்டு விட்டதாக சொல்லப்பட்டது. ஆனால் நிறுத்தவில்லை. இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் ஒரே பிடிவாதத்துடன் போராடினார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

போரை நிறுத்துமாறு இந்தியா இரு தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்த போதிலும் இரண்டு தரப்பினரும் அதற்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்நாட்டு மீனவர்களை டில்லியில் சந்திக்கும் ராஜித

(லண்டன்)

மீனவர் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்திய அரசின் அழைப்பின்பேரில் இந்தியா செல்லவுள்ள மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன, தமிழ்நாட்டு மீனவர்களை டில்லியில் சந்தித்துப் பேசுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர் அமைப்பின் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த சந்திப்புக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை மீன்பிடித்துறை அமைச்சின் ஆலோசகர்களில் ஒருவரும் இந்திய - இலங்கை மீனவர்கள் சங்க அமைப்பின் இலங்கை இணைப்பாளருமான எஸ்.பி. அந்தோனிமுத்து பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

இதற்கிடையே, தமிழகத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் சீரற்ற காலநிலை கரையோர மக்கள் பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தினை அடுத்து வடக்கில் நிலவிவரும் சீரற்ற கால நிலையினால் கடற்கரையோரத்தில் வசித்துவரும் மக்களை 100 மீற்றருக்கப்பால் பாதுகாப்பாக்ச் செல்லுமாறு அனர்த்த பாதுகாப்பு நிலையம் அறிவுறுத்தியுள்ளது. இதனால் வடக்கில் கடற்கரையோரமாக வசித்து வரும் மக்கள் பாதுகாப்புக்கருதி உறவினர், நண்பர்கள் வீடுகளில் நேற்று முதல் தங்கியுள்ளனர்.

நேற்றிரவு கிடைத்த தகவலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து 80 கிலோமீற்றர் தொலைவில் புயல் மையம் கொண்டுள்ளதாகவும் திருமலையிலிருந்து வடக்கு, கிழக்காக இது நகர்வதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்திருந்தது.

குடாநாட்டில் கடற்கரையை அண்மித்து வாழும் மக்களை 100 மீற்றர் தள்ளி இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம், பிரதேச செயலகங்கள், பொலிஸார் ஆகியோர்

19 ஆம் பக்கம் பார்க்க

## மாணவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சி; அமைச்சர் டக்ளஸின் நோக்கமும் அதுவே

### உடற்கல்வி ஆசிரியர் தர்மகுமார் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களை சிறந்த ஆரோக்கியமுள்ள சமூகமாக வளர்த்தெடுக்க வேண்டுமென்பதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதான நோக்கமாகவுள்ளது என உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரி ஆசிரியர் தர்மகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் அமைச்சருடன் நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணக்க அரசியல் ஊடாகவே தமிழ் மக்களுக்கான அபிவிருத்தி, அரசியலுரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினாலேயே பெறமுடியும்.

தேர்தல் காலங்களில் ஏனைய அரசியல்வாதிகள் சாத்தியப்படாத வாக்குறுதிகளை மக்களிடம் வழங்கி வாக்குகளைப் பெற்று, இறுதியில் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். மக்களை அச்சத்திற்குள்ளாக்கிய ஆவா வாள்வெட்டுக் கும்பல் கைது

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு மக்களிடையே அண்மைக்காலமாக பெரும் அச்ச நிலையை தோற்றுவித்திருந்த ஆவா குழு எனப்படும் பாரிய வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய அறுவரை கைது செய்துள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொகான் டயஸ் தினமுரசுக்குத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொதுமக்கள் வழங்கிய இரகசிய தகவல்களின் அடிப்படையில்

19 ஆம் பக்கம் பார்க்க

# கால்நடைகளுக்கு "கால்வாய்" தொற்று;
# வவுனியா வடக்கு பிரதேசத்தில் தீவிரம்

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கால் நடைகளுக்கு கால்வாய் தொற்று நோய் ஏற்பட்டுள்ளதாக கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் வவுனியா மாவட்ட உதவிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி தபோதினி தேவநேசன் தெரிவித்தார்.

கால்வாய் நோய் தொற்று வவ்வுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சின்ன டம்பன் என்ற கிராமத்தில் ஏற்பட்டுள்ளது. இந்நோயானது யாழ்ப்பாண மாவட்டத்தில் சில கால்நடைகளில் ஏற்பட்டிருந்தது. அங்கிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட மாடுகளில் இருந்தோ அல்லது எரு ஏற்றுவதற்கு வருகை தரும் லொறிகளிலிருந்தோ இந்நோய் இங்கு பரவியிருக்கலாம் என நம்பப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இது ஒரு வைரஸ் கிருமியால் ஏற்படும் தொற்று நோயாகும். இந்நோய் கால்களில் குழம்பு உள்ள மிருகங்களான ஆடு, மாடு, பன்றி போன்றவற்றுக்கு ஏற்படும். இந்நோய் கால்நடைகளுக்கு ஏற்பட்டிருப்பின் காய்ச்சல், வாய், நாக்கு, கால் குழம்பு, மூக்கு, முகம் மற்றும் மடி ஆகியவற்றில் பெரிதளவான கொப்புளங்கள் ஏற்பட்டு அவை உடைந்து புண்களாக மாறும்.

பசியின்மை, வாயிலிருந்து உமிழ்நீர் வடிதல் போன்ற குணங்குறிகள் தோன்றும். இதனால் பால் உற்பத்தி குறையும். கன்றுகளுக்கு இதயம் தாக்கப்பட்டு இறப்பு ஏற்படும். சினைப்பட்ட பசுக்களுக்கு கருச்சிதைவு ஏற்படும். அத்துடன் பால் கறப்பவர்களின் கைவிரல்களில், உள்ளங்கையில் புண் ஏற்பட்டு தோல் கழரும் நிலை ஏற்படும். என்றும் உதவிப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

எனவே இந்நோய்ப் பரம்பலை தடுக்கும் முகமாக எமது கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்நோய்ப் பரம்பலைத் தடுக்கும் வழிகளாக நோய்க்குரிய தடுப்பு மருந்து ஏற்றுதல் மற்றும் நோய் வந்த மாடுகளை தனியாக அடைத்து வைத்து உணவூட்டல், தொற்று ஏற்பட்ட இடங்களிலிருந்து மாடுகளை கொண்டு வருதலை தடுத்தல் போன்றவை கால்நடை வளர்ப்போர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாக இருக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நோயை தடுப்பதற்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் கடந்த வியாழக்கிழமை முதல் வவுனியா மாவட்டம் முழுவதிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே பண்ணை உரிமையாளர்கள் தங்கள் பிரிவு கால்நடை வைத்தியர்களுடன் தொடர்பு கொண்டு இத்தடுப்பூசியை இலவசமாக தங்களது மாடுகளுக்கு ஏற்றுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர் என்று அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

# உடையார்கட்டிலல் விபத்து;
# ஒருவர் படுகாயம்

முல்லைத்தீவு, உடையார்கட்டுப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பரந்தனிலிருந்து உடையார்கட்டு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் புதுக்குடியிருப்பிலிருந்து உடையார்கட்டுக்கு சென்றுகொண்டிருந்த முச்சக்கரவண்டியும் ஏ - 35 வீதி, உடையார்கட்டுப் பகுதியில் நேருக்கு நேர் மோதிக்கொண்டுள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் வந்தவர் சுய நினைவிழந்து இருப்பதினால் யார் என்று அடையாளம் காணமுடியவில்லையென புதுக்குடியிருப்புப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

விபத்தை அடுத்து முச்சக்கர வண்டிச் சாரதி கைது செய்யப்பட்டு, புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (கே)


## திருமறைக்கலாமன்றம்
## கலைத்தூது அழகியல் கல்லூரி

எமது கல்லூரியினால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான 2014 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பிரதான பாடங்கள்**

■ வாய்ப்பாட்டு ■ நடனம் (பரதம், கதகளி, மோகினி)
■ வீணை ■ வயலின் ■ புல்லாங்குழல் ■ மிருதங்கம்
■ ஓர்கன் (கீபோட்) ■ ட்றம் ■ ஒக்ரோபாட்
■ சித்திரம் ■ நாடகமும் அரங்கியலும்

**சிறப்பு பாடங்கள்**

■ கூத்து ■ கண்டிய நடனம் ■ யோகாசனம்
■ அழகுக்கலை (முக ஒப்பனை, தலையலங்காரம், கேக்ஜசிங், சேலை அலங்காரம், தையல்)
■ பண்பாடு (கிறிஸ்தவக் கலைகள், சைவ சித்தாந்தம்)

**துணைப்பாடம்**

■ ஆங்கிலம்

இப்பாடங்களைப் பயில விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து 14.01.2014 செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கும், தொடர்புகளுக்கும்
**அதிபர்,**
**கலைத்தூது அழகியல் கல்லூரி,**
**இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.**
(C/2595) **தொ.பே. 021 222 9419.**


# பண்ணைப்பாலத்தில் விபத்து;
# தம்பதியர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பண்னைப்பாலத்தின் ஊடாக யாழ்.நோக்கி நேற்று மாலை 6.45 மணியளவில் சரவணையில் இருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவன், மனைவி பண்ணைப் பாலத்தில் சறுக்கி விபத்துக்குள்ளானதில் காயமடைந்தனர்.

இவ்விபத்தில் சிக்கிய மனைவி காயங்களுக்குள்ளான நிலையில் அவ்வழியாக வந்த அம்புலன்ஸ் வண்டியின் உதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். கணவர் சிறுகாயங்களுக்குள்ளான அதேவேளை தெய்வதீனமாக கைக்குழந்தைக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. இப்பாலத்தில் மழை காலங்களில் இவ்வாறான விபத்துச் சம்பவங்கள் அடிக்கடி ஏற்படுவதாக பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (21)



மகேஸ்வரி நிதியத்தின் உதவியுடன் வடமராட்சி கிழக்கு கொட்டோடை பகுதியில் சிவனொளி விளையாட்டுக்கழகம், இளைஞர்கழகம் என்பன இணைந்து கஜூமர கன்றுகள் நாட்டியுள்ளனர், இதன் மூலம் பிரதேச இயற்கைவளத்தை பாதுகாப்பதும், பிரதேச மக்கள் பயன் பெறக்கூடியதாகவும் இருக்குமென பிரதேச மக்கள் நம்பிக்கை தெரிவித்தனர். இந்நிகழ்வில் மகேஸ வரி நிதியத்தின் இணைப்பாளர் த.றஜீவ், பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினரும் ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளருமான ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் பிரதேச மக்கள் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# அரசடி விநாயகர் மகோற்சவம் இன்று

(யாழ்.நிருபர்)

யாழ்.வண்னை மணிக்கூட்டு வீதி அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருந் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தைப் பொங்கல் தினத்தன்று இரதோற்சவமும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (10)

# கொடியேற்றம்

காரைநகர் பயிரிக்கூடல் சுப்பிரமணியசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 16 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (10)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2493 திகதி 04-01-2014

ஆங்கில எழுத்து: X

வெற்றி எண்கள்: 09 28 30 38 | போனஸ் இல: 21

ஜக்பொட் பரிசு ரூ.21,330,125/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 226916 | 20/- | 4,538,320/- |
| 2 இல | 16290 | 100/- | 1,629,000/- |
| 3 இல | 331 | 1,000/- | 331,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9121 | 40/- | 364,840/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 644 | 1,000/- | 644,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 21,330,125/- | - |
| 1 இல + போனஸ் இல | 10790 | 100/- | 1,079,000/- |
| 2 இல + போனஸ் இல | 505 | 500/- | 252,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 465 | 200/- | 93,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 265099 | | 11,685,660/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.01.08 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 21,950,150/-

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7
(C/3266)


# தொடரும் ஆடுகள் திருட்டு;
# இருவருக்கு விளக்கமறியல்

ஆடுகளைத் திருடினர் என்ற சந்தேகத்தில் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதவான் சின்னத்துரை சதீஸ்குமார் கடந்த வெள்ளியன்று உத்தரவிட்டுள்ளார்.

கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில், குறித்த சந்தேக நபர்கள் இருவரையும் வட்டுக்கோட்டைப் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்தனர்.

இந்நிலையில், காரைநகர் பிரதேசத்தில் பரவலாக ஆடுகள் திருடப்படுவதாக ஊர்காவற்றுறை மற்றும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையங்களிலும் காரைநகர் பிரதேச செயலகத்திலும ஆடுகளை வளர்ப்போர் நேற்று முன்தினம முறைப்பாடு செய்துள்ளனர்.

இதுவரையிலும் தங்களுடைய 10 ஆடுகள் திருடப்பட்டுள்ளதாக ஆடுகளை வளர்ப்போர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். ஆடுகளை வளர்ப்போர் புற்றரைகளில் மேய்ச்சலுக்காக ஆடுகளை கட்டிவைத்திருக்கும்போது, மோட்டார் சைக்கிள்களில் வரும் சிலர் ஆடுகளைத் திருடிச் செல்வதாகவும் அந்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகளவில் ஆடுகளை வளர்ப்பதில் ஈடுபடும் மக்கள் இவ்வாறு ஆடுகள் திருட்டுப் போவதினால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்தனர்.

# அதிகரிக்கப்பட்ட வாழ்க்கை செலவுப்படி

# இம்மாதம் முதல் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைய அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட 1200 ரூபா வாழ்க்கைச் செலவுப் படியை இம் மாதம் கொடுப்பனவுடன் வழங்கு வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி.பி.அபேயகோன் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு 1200 ரூபா வாழ்க்கைபடி அதிகரிக்கப்பட்ட நிலையில் கொடுப்பனவை இம்மாதம் முதல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு அமைச்சின் செயலாளர் அனுப்பி வைத்துள்ள 37/2012 ஆம் இலக்க அரச சுற்றறிக்கையின் ஊடாக அறிவிக்கப் பட்டுள்ளது.

அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்குவழங்கப்பட்டுவரும் 6 ஆயிரத்து 600 ரூபா வாழ்க்கைக் செலவுப் படியானது இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து 7 ஆயிரத்து 800 ரூபாவாக அதிகரித்து வழங்கப்படவேண்டும். அத்துடன் தற்காலிக அடிப்படையில் நாள் சம்பளம் பெறுகின்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற நாளாந்த வாழ்க்கைச் செலவுப் படியானது இம்மாதத்திலிருந்து 260 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

இதேவேளை 2005.12.31 ஆம் திகதிக்கு முன்னர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ள அலுவலர்களுக்கு 3,675 ரூபாவாகவும், 2006. 01.01ஆம் திகதிக்கு பின்னர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள அலுவலர்களுக்கு 3525 ரூபாவாகவும் வாழ்க்கைச் செலவுப் படியினை அதிகரித்து வழங்குமாறு சுற்று நிருபத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## "இனிமை" சஞ்சிகை மீண்டும் வெளிவரவுள்ளது

(யாழ்.நிருபர்)

இனிமை காலாண்டு சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன. 1980களில் வெளிவந்து தவிர்க்கமுடியாத காரணங்களினால் இடையில் நின்றுபோன "இனிமை" காலாண்டு சஞ்சிகை மீண்டும் வெளிவரவுள்ளது.

வாசகர்களால் பெரிதும் பாராட்டப்பட்டு வந்த இச்சஞ்சிகை தற்போது கலை வாதி கலீலைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு நாடறிந்த எழுத்தாளர்கள் பலரின் ஆக்கங்களுடன் வெளிவரவுள்ளது.

இனிமை சஞ்சிகைக்கு ஆக்கங்கள், வெளியீடுகள், இலக்கியத்தகவல்களை அனுப்ப விரும்புவோர் THE EDITOR, INIMAI 148, POLKOTUWAROAD, PINWALA, PANADURA என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

## புதிய நிர்வாகத்தெரிவு

வண் - வடமேற்கு பத்திராளி கோவில் வீதி, வள்ளுவன் சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 25ஆம் திகதி புதன்கிழமை நிலைய வளாகத்தில் நடைபெற்றது. அதன் போது நடப்பாண்டு நிர்வாகிகளாகக் கீழ்க் கண்டோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் பொ.குமாரசாமி, உபதலைவர் ஞா.உதயசங்கர் செயலாளராக நா.கனகராசா, உபசெயலாளராக மு.ரவிச்சந்திரன், பொருளாளராக செ.தேவராசா, நிர்வாக சபை உறுப்பினர்களாக மு.இந்திரன், கி.நந்தகுமார், தே.ரதிஸ்வரன், க.மணிகரன், து.அயந்தன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். (68)


## மாங்குளத்தில் பேருந்துநிலையம் அமைக்கும் படி கோரிக்கை

வடமாகாணத்தின் முக்கிய நகரமாகக் காணப்படுகின்ற மாங்குளத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் ஒன்றினை அமைக்கவேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாங்குளம் சந்தியானது மன்னார், வெள்ளாங்குளம், மாங்குளம், முல்லைத்தீவு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஆகிய பகுதிகளை இணைக்கின்ற பிரதான சந்தியாகக் காணப்படுவதுடன் நாள் ஒன்றுக்கு இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் ஒன்றுகூடுகின்ற இடமாகவும் காணப்படுகின்றது.

எனவே, வடமாகாணத்தின் முக்கிய நகரமாக விளங்கும் மாங்குளத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்கப்படவேண்டுமெனப் பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (10)

## இளைஞர்கழகத்தினால் உபகரணங்கள் வழங்கல்



(மானிப்பாய்)

சுதுமலை வடக்கு இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவம் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பாடசாலையில் கல்வி கற்கும் சுமார் 50 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஆர்.நவசக்தியா, முன்னாள் தேசிய சம்மேளனப் பிரதிநிதி ச.செந்தில்குமரன், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இந் நிகழ்வில் இளைஞர் கழகங்களின் அங்கத்தவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (48)

## வாசுவின் துக்கங்கள்




அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சில நாட்களாக தூக்கம் இல்லாமல் தவிக்கிறார்.

அமைச்சுப் பதவியில் நீடிப்பதா? அல்லது அதைத் துறப்பதா? என்ற குழப்பம் அவரை ஆட்டிப்படைக்கிறது.

வாசு, தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டுக்கு பொறுப்பான அமைச்சர்.

இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களும் மதிக்கின்ற ஒரு மனிதர்.

அரசியலில் யாரையும் காயப்படுத்தாதவர். அவருடைய கைகளிலும் இரத்தக் கறையும் இல்லை குற்றத் தடையும் இல்லை.

தற்போதுள்ள அரசாங்கத்தின் மீது தீராக்காதல் கொண்டு அரசாங்கத்தை ஆதரிப்பவரோ அமைச்சின் சுகபோகங்களை அனுபவிப்பவரோ அல்ல.

ஆனால், யுத்தம் முடிந்த பிறகு உருவாகிய அரசியல் சூழலை இலங்கையின் நீடித்த அமைதிக்கும், நிரந்தர சமாதானத்திற்குமாக மாற்ற வேண்டும் என்று யோசித்தவர்.

என்றபடியால்தான் விமர்சனங்களோடு இந்த அரசாங்கத்தை ஆதரித்தவர்.

வாசுவின் இயல்புக்கும் நோக்கத்திற்கும் பொருத்தமாக–காலத்திற்கும் சூழலுக்கும் பொருத்தமாக அவருக்கு தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு அமைச்சின் பொறுப்புக் கிடைத்தது.

இந்தப் பொறுப்பு கடினமான ஒரு காரியம் என்று தெரிந்துகொண்டே கையில் எடுத்தார்.

ஏனென்றால், இலங்கை அரசியல் மட்டுமல்ல இலங்கைச் சமூகங்களே இனவாதத்தில் நன்றாக ஊறியவை.

இப்படியான நிலையில் நினைத்த மாத்திரத்தில் ஒருமைப்பாட்டையோ, நல்லிணக்கத்தையோ ஏற்படுத்திவிட முடியாது என்று வாசுவுக்குத் தெரியும். என்றாலும், முயற்சிக்காமல் இருக்க முடியாது அல்லவா?

ஆகவே, கட்டாந்தரையில் பயிர் செய்வதைப் போல வாசு தேசிய மொழிகள் ஒருங்கிணைப்புக்கான வேலையில் இறங்கினார்.

ஆனால், அவர் எதிர்பார்த்ததையும் விட நிலைமைகள் மிகக் கடுமையாக உள்ளன.

ஒரு பெயர்ப்பலகையை மாற்ற முடியாதளவிற்கு வாசுவினுடைய அமைச்சு உள்ளது.

வாசுவினுடைய எண்ணங்களுக்கு மாறாகவே நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

கொழும்பு–வெள்ளவத்தையில் தமிழ்ச் சங்கத்தின் ஒழுங்கையை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல ஆனையிறவிலும் சிங்களப் பெயரைப் போடுவதைத் தடுக்க முடியாமல் இருக்கிறது.

வாசு நன்றாகக் களைத்துப் போய்விட்டார்.

அமைதியை விரும்புகின்ற ஒரு மனிதர் என்பதாலும் மனச்சாட்சியுடன் இயங்குகின்ற ஒரு தலைவன் என்பதாலும் இந்த மாதிரிக் காரியங்களை வாசுவினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

எனவே, வாசு அமைச்சுப் பதவியை தூக்கி குப்பைக் கூடைக்குள் போட்டுவிடலாமா? என்று யோசிக்கின்றார்.

பெயரளவில் பல அமைச்சுக்களை வைத்துக் கொண்டு பலர் இந்த நாட்டை கெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், வாசு போன்றவர்களுக்கு இது ஏற்க முடியாமல் இருக்கும். இதேவேளை, தேசிய ஒருங்கிணைப்புக்கும் நல்லிணக்கத்திற்குமான அரசாங்கம் இன்னொருபுறத்தில் "புல்டோசர்" புறோக்கிராம் போட்டிருக்கிறது.

இலங்கை சமூகங்களிடம் நன்மதிப்பைப் பெற்ற வாசு போன்றவர்களை பலப்படுத்துவதற்குப் பதிலாக தமிழ் உத்தியோகத்தர்களை சிங்களப் பகுதிகளிலும், சிங்கள உத்தியோகத்தர்களை தமிழ்ப் பகுதிகளிலும் அதிரடியாகக் கொண்டு போய்க் குவிப்பதால் பெரும் நன்மைகள் எதுவும் கிட்டப்போவதில்லை.

அது இந்த சமூகங்கள் ஒருவரையொருவர் சந்தேகிக்கவோ முரண்பாடு கொள்வதற்குமே வழிவகுக்கும்.

அப்படித்தான் தமிழர்கள் சிங்களப் பகுதிக்கும், சிங்களவர்கள் தமிழ்ப் பகுதிக்கும் மாறி வேலை செய்தாலும் அது ஒரு ஒழுங்கு முறைப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் நடக்கவில்லை.

இந்த மாதிரித்தான் நிலைமைகள் தொடரும் என்றால், வாசு மட்டும் பாவமல்ல. இந்த நாடே பரிதாபத்திற்குரியது.

வரலாற்றில் இனிப்பும் உண்டு கசப்பும் உண்டு. நாம் எதைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம்.

பிறர் செய்த உபகாரம் உன் கையில் அதிகமாக தங்கிவிடாமல் பார்த்துக்கொள். - எமர்சன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வியாபார தலைமையும் அரசியல் தலைமையும்!

நமது அரசியல் சூழலில் வியாபாரிகள் அரசியல்வாதிகளாக மாறுவதும், அரசியல்வாதிகள் வியாபாரிகளாய் இருப்பதும் சகஜமாக இருக்கிறது. தமிழ்மக்களை உய்யவிடாத துரதிர்ஷ்டமாய்ப் பிடித்தாட்டி வருபவற்றில் இந்தச் சீத்துவக்கேட்டுக்கும் ஒரு பங்கிருக்கிறது.

ஆகப் பெருந்துயரம் என்னவென்றால் நமக்கு வாய்த்த அரசியல் திலகங்களுக்கு, வியாபாரிகளிடம் இருக்கக்கூடிய நேர்மை நியாயம் கூடக் கிஞ்சித்தும் இல்லாதிருப்பதுதான்.

மக்களின் காசைச் சுருட்டிக் கொண்டோடியவர்களும், கட்சிச் சொத்தைச் சுருட்டியவர்களும், சாராய வியாபாரிகளும், அகதிமக்கள் இருந்த காணிகளைப் பிடுங்கிய அப்புக்காத்துமாரும்தான் மக்களின் வாக்குகளையும் சுருட்டிக் கொள்கிறார்கள்.

வியாபாரத்திற்கு அரசியலைப் பயன்படுத்திக் கொண்டது போய், இன்று, எமது மக்களின் கஷ்டங்களையே கூவி விற்று அரசியல் லாபம் தேடும் வியாபாரிகளாய் மாறிவிட்டவர்களைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அரசியல் தலைமைத்துவத்துக்கு குறிப்பிட்ட முன்மாதிரியும், சிறப்பான சிந்தனை முறையும் அவசியம். வியாபாரிகளைப் பொறுத்தவரை லாபத்தை அதிகரிப்பதொன்றே இலக்கு.

வியாபாரத்தில் நியாயமற்று இருப்பது கடைசியில் அவர்களையும் மிஞ்சிப்போனால் அவர்கள் பங்காளிகளையும் சீரழிக்கும். அரசியலில் நியாயமின்றி செயல்பட்டால் முழு தேசத்தின் எதிர்காலமும் நிர்மூலமாகும்.

வியாபார தலைமைத்துவத்தில் பலமுள்ளவனே வாழ்வான் என்ற நியதி செல்லுபடியாகும். அரசியல் தலைமைத்துவமோ பலவீனனின் வாழ்வோடு தன்னை பிணைத்துக் கொள்வது.

அரசியல் தலைமைத்துவத்துக்கான ஏழு வெற்றிகரமான நற்பண்புகளைக் குறிப்பிடுகிறார்கள். நம்பகத்தன்மை, கருணை, கடந்து பார்க்கும் சக்தி, தோழமைப் பண்பு, கடப்பாடு, கவர்ச்சி மற்றும் போட்டித்திறன் ஆகிய பண்புகள்தான் அவை.

அதேபோல தவிர்க்கவேண்டியவையாக ஏழு மோசமான தீமைகளைக் குறிப்பிடுகிறார்கள். பேராசை, பெரு நுகர்வு, சோம்பேறித்தனம், பொறாமை, கர்வம், கோபம் ஆகியவைதான் அவை. அரசியலை விரைவாக பணம் சம்பாதிக்கும் வழியாகப் பார்க்கும் அரசியல்வாதியிடம் பேராசை என்ற தீய பண்பு உருவாகிறது.

இலட்சக்கணக்கான மக்கள் பசியிலும், நல்ல வசதிகள் கிடைக்காமலும் இறந்துபோகின்ற வேளையில், தாங்கள் விழுங்க நினைக்கும் பண்பு பெருநுகர்வாகும். நல்ல உணவு மற்றும் வசதிகளுள்ள அரசியல் தலைவர் அதே தரத்தில் தமது மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்று குறைந்தபட்சம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

பசியுடன் இருக்கும் வசதிக் குறைபாடுகள் கொண்ட மக்கள் மீது கருணை வந்தால் அது ஒரு நல்ல அரசியல் தலைவரை உருவாக்கும். மக்களுக்கு நல்லது செய்யும் எண்ணமின்மை, சோம்பேறித்தனம் என்னும் தீமைக்கு தவறான தலைவர்களைக் கொண்டு செல்கிறது.

இதற்குப் பதிலாக அவர்கள் எதிர்காலம் குறித்து கடந்துபார்க்கும் சக்தியுடன் இருக்க வேண்டும். இதுதான் பெரிய தலைவர்களை உருவாக்குகிறது.

இப்படித்தான் அரசியல் தலைமைத்துவம் இருக்கவேண்டும். அதன் மூலம்தான் ஒருவர் நாட்டையும் மக்களையும் நல்ல எதிர்காலத்துக்கு இட்டுச் செல்லமுடியும். அதைத்தான் காந்தி, மாவோ, பிடல் காஸ்ட்ரோ, லெனின், நெல்சன் மண்டேலா மற்றும் சேகுவேரா ஆகியோர் செய்தனர்.

அவர்களது வாழ்க்கையே ஏழு தீய பண்புகளைத் தவிர்த்து ஏழு நற்பண்புகளை கைக்கொண்டதுதான். அத்தகைய தலைவர்களால்தான் மக்கள் காப்பாற்றப் படுவார்கள். வியாபாரத் தலைவர்கள் மக்கள் தொடர்ந்தும் வீழ்ந்து கிடக்கவே செயற்படுவார்கள்.

- ஆசிரியர்.

# ஆனையிறவு புகையிரத நிலையம்

# பெயர் மாற்றும் முயற்சி தோல்வி

ஆனையிறவு புகையிரத நிலையத்தின் பெயர் மாற்றப்படாது என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தன்னிடம் உறுதியளித்ததாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஆனையிறவு புகையிரத நிலையத்தின் புனர்நிர்மாண பணிகளுக்காக தெற்கு மக்கள் தமது உதவிகளை வழங்கியுள்ளார்கள்.

எனவே, ஆனையிறவு புகையிரத நிலையம் என்ற பெயருக்கு அருகில் அடைப்புக் குறிக்குள் தெற்கிற்கும் வடக்கிற்கும் உறவுப் பாலமாக அமையும் தொனிப்பொருளில் வாசகம் ஒன்று பொறிக்கப்படும் எனவும் தன்னிடம் கூறியதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களது உரிமைகளுக்கு பாதகம் அல்லது குந்தகம் விளைவிக்கப்பட்டால் அதற்கு நாம் ஒருபோதும் துணைபோக மாட்டோம். மாறாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி அவ்வாறான செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுப்போம்.

நாம் அரசாங்கத்துடன் இணைந்திருக்கின்றோம் என்பதற்காக அரசாங்கம் போடும் தாளத்துக்கெல்லாம் ஆடுகின்றவர்கள் என்று அர்த்தமில்லை.

எமது மக்களுக்கு சேவையாற்றுவதற்கும் அநீதியிழைக்கப்படுகின்ற பட்சத்தில் அதனை தடுத்து நிறுத்துவதற்குமே நாம் அரசுடன் இணைந்திருக்கின்றோம்.

அரசாங்கத்துக்கு வெளியில் இருந்து கொண்டு மக்களுக்காக குரல் கொடுக்கலாம். ஆனால், வேறெதுவும் செய்ய முடியாது எனவே தான் அரசுடன் இணைந்து மக்களது தேவைகளை உணர்ந்து நாம் சேவையாற்றி வருகின்றோம். இது ஒரு அரசியல் சாணக்கியம்.

நான் பிரதி அமைச்சராக இருந்த காலத்தில் எமது மக்களுக்கு ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளை நேரடியாக தலையிட்டு தீர்த்து வைத்திருக்கின்றேன். அதேபோன்று மேலும் பல சேவைகளை செய்திருக்கின்றேன். அதனை மக்கள் நன்கு அறிவார்கள்.

இன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இணைந்து எனது மக்கள் சேவையினை தொடர்ந்துள்ளேன். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பது மக்களுக்கு நீண்ட காலமாக சேவையாற்றிவரும் மிகப் பெரிய அமைப்பாகும். எனவே, அதனோடு இணைந்து சேவையாற்ற கிடைத்தமை மகிழ்ச்சியளிக்கிறது எனவும் தெரிவித்தார்.

## தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு விழாநிகழ்வு

(யாழ்.நிருபர்)

தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் அண்மையில் கல்முனையில் நடைபெற்றன.

கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரியில் கிளனிக் மண்டபத்தில் அதிபர் அருட்சகோதரர் ஸ்ரீபன் மத்தியூ தலைமையில் நடைபெற்ற இந்நூற்றாண்டு விழா நிகழ்வுகளில் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. ரூபிலன்ரினா பிரான்சிஸ், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் வி.ரி.சகாதேவராஜா, கல்முனை வலய தமிழ்மொழிப்பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் கண.வரதராஜன், பாவாணன் அக்கரைப்பாக்கியன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (10)

## குடமுழுக்கு பெருவிழா

(யாழ்.நிருபர்)

வெள்ளவத்தை ஸ்ரீ ஐஸ்வர்யலஷ்மி அம்பாளுக்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள தத்துவத் திருக்கோயிலுக்கு குடமுழுக்குப் பெருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தைப் பொங்கல் தினத்தன்று நடைபெறுமென ஆலய நிர்வாக சபைத்தலைவி மாலா சபாரத்தினம் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை கம்பன்கழக வெள்ளி விழாவையொட்டி கழக நம்பிக்கைப் பொறுப்புச் சபையால் 2005இல் அமைக்கப் பெற்ற ஐஸ்வர்யலஷ்மி ஆலயமே விரிவுபடுத்தப்பட்டு குடமுழுக்கு நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கணபதி ஹோமத்துடன் குடமுழுக்கு கிரியைகள் ஆரம்பமாகவுள்ளன.

அடுத்தநாள் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை அடியார்கள் கோயிலில் அமைக்கப்பட்டுள்ள விக்கிரகங்களுக்கு எண்ணெய் சாத்துவதற்கென நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. 14 ஆம் திகதி தைப் பொங்கல் அன்று காலை 6 மணிக்கு யாக பூசைகள் ஆரம்பமாகவுள்ளன. இப்பூசைகளைத் தொடர்ந்து ஸ்ரீ ஐஸ்வர்யலஷ்மி அன்னையின் திருவீதி உலா காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (10)

## நல்லூரில் கலாசார விழா

(யாழ்.நிருபர்)

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் 2013 ஆம் ஆண்டுக்கான கலாசார விழா எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச செயலரும் கலாசார பேரவைத் தலைவருமான பா.செந்தில்நந்தனன் தலைமையில் நல்லூர் நடராஜாபரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜாவும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியகலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாகீர்த்தி திருமதி.சாந்தினி சிவனேசனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி. சுகன்யா அரவிந்தனின் இசையரங்கு, கவிஞர் சோ.பத்மநாதனின் தலைமையில் கவியரங்கு, கலைஞானச்சுடர் மலர் வெளியீடு அரியாலை ஏழிசைமிருதங்க நர்த்தனாலய மாணவிகளின் நாட்டியார்ப்பண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

கடந்த ஆண்டு கலைஞானச்சுடர் விருது பெற்ற கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறும். (10)

## மனித உரிமைகள் விழிப்புணர்வு நாடுதழுவிய செயற்றிட்டம்

(கொழும்பு)

மனித உரிமைகள் குறித்து நாடு முழுவதும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக விசேட செயற்றிட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

தேசிய இளைஞர் சேவை அமைப்பு இந்த செயற்றிட்டத்தை அமுல் செய்ய உள்ளது. குறிப்பாக இளைஞர்கள் மட்டத்தில் இவ்விடயம் குறித்த தெளிவான புரிதலை ஏற்படுத்தும் நோக்குடன் இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.


இதன் மூலம் முழுமையான விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கமுடியும் என்று தேசிய இளைஞர் சேவை அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் லலித் பியும் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார். எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டை அண்மித்ததாக இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் நாடு முழுவதும் இளைஞர்களை ஒன்றிணைத்து, மனித உரிமைகள் தொடர்பாகவும், இலங்கைக்கு எதிராக சுமத்தப்படுகின்ற மனித உரிமை குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தவிருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தங்களை நம்புவதை விட அதிகமாக சர்வதேச சமூகத்தை நம்புகிறது

**தமிழ் தேசியக் கூட்டமைப்பு தங்களை நம்புவதைக் காட்டிலும் அதிகமாக சர்வதேச சமூகத்தை நம்புகிறது. வடக்கில் வாரிச் சுருட்டியெடுத்த தேர்தல் வெற்றி இந்த பிரச்சினைகளை நம்பிக்கையுடன் கையாள்வதற்கும் மற்றும் தீர்வுகளை ஒழுங்கான முறையில் இலங்கை அரசியலமைப்பு திட்டத்துக்குள் மேற்கொள்வதற்கும் ஏற்ற வாய்ப்பை அவர்களுக்கு கொடுத்துள்ளது. ஆனால் அதற்குமாறாக அவர்கள் ஒரு அரசியல் எதிர்ப்பு நிலைக்குச் சென்றுள்ளார்கள்.**



■ என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து

நாடாளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்ட விவாதத்துக்கு பதிலளித்துப் பேசுகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இனப்பிரச்சினைக்கு உள்நாட்டில் உருவாகும் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார். நாங்கள் எதிர்பார்த்தபடியே சில, நாட்களுக்கு முன்பு வவுனியாவில் நடந்த ஒரு கூட்டத்தில் வைத்து ரி.என்.ஏ தலைமை, முன்னர் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொள்ள வருமாறு அரசாங்கம் விடுத்த அழைப்பை நிராகரித்ததுபோல மீண்டும் ஒருமுறை இதனையும் நிராகரித்திருந்தது.

வடக்கில் தேர்தலுக்கு பின்பு பொதுத் தோற்றங்கள் மற்றும் கள யதார்த்தங்கள் என்பன மாறிவிட்டன. இனப்போருக்குப் பின்பு அது மீண்டும் முன்னிருந்த நிலைக்கு திரும்பி விட்டது. இந்தச் சந்தர்ப்பத்தை யாருமே தீவிரத்துடனும் யுற்றும் நேர்மையுடனும் பயன்படுத்தவில்லை. அது இப்போது யாருக்கும் தேவைப்படவுமில்லை.

இப்போது பிரச்சினையாக இருப்பது உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் தீர்வுதான், ஈழப்போர் 4இன் முடிவுக்கு பின்னர் அரசாங்கம் அப்படியான ஒரு தீர்வு யார் வீட்டிலிருந்து வளர்க்கப்பட வேண்டும் அல்லது வளர்க்கப்படுகிறது என்று இதுவரை எதுவும் சொல்லவில்லை. போரினால் அதிர்ச்சி அடைந்துள்ள தமிழ் புலம் பெயர்ந்தவர்கள் அது தங்களின் திருப்திக்கு ஏற்ற விதத்தில் வரவேண்டும், சர்வதேச சமூகத்தின் மூலமாகத்தான் வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். அதற்கிடையில் அரசாங்கம், நாடாளுமன்றத்திற்கு ஒரு தீர்வு காண்பிக்கப்பட்டு, வளர்த்து அதை அறுவடை செய்யவேண்டும் என முடிவு செய்துள்ளது. ஆனால் ரி.என்.ஏ அதனை உலகத்தின் தோட்டத்தில் இருந்துதான் அறுவடை செய்ய வேண்டும் என விரும்புகிறது.

ரி.என்.ஏ பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் மீண்டும் இணைவதற்காக அரசால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களது மக்கள் நித்தமும் நிச்சயமற்ற ஒரு நிலையில் வாழமுடியாது. ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் ஒரு அரசியல் தீர்வுக்காக அவர்கள் தொடர்ந்து உறுதிமொழி எடுத்துக் கொள்ளவேண்டும். ஒரு தேசிய ஒருமிப்பு மற்றும் ஒரு தேசிய பேச்சுவார்த்தை இல்லாமல் அதை அடைய முடியாது.

ஜனாதிபதி ராஜபக்ஸவுக்கு இப்போது நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. ஜே.ஆர்.ஜெயவர்தனா ஒப்பந்தத்தை கையெழுத்திட்டபோது, அவருக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மை இருந்தது. அவர் பேச்சுவார்த்தை நடத்தி 13 ஏ-யில் கையெழுத்திட்டு அதை விரைவுபடுத்தியது நாளுமன்றத்துக்கு வெளியேதான். அவரது பதவிக் காலத்துக்குப் பின், நீண்ட நாட்கள் ஆவதற்கிடையிலேயே அதனை செயலாக்கும் தன்மை அதன் உணர்வாலும் மற்றும் உள்ளடக்கத்தாலும் தோல்வி கண்டது.

தற்போதைய நிலை, அக்கறையற்றதும் மற்றும் ஊகிக்கக்கூடிய தொடர்புகளைக் கொண்ட ஐநாமனித உரிமைச் சபையின் தீர்மானங்களுடன் ஆரம்பமாகியுள்ளது. அது இலங்கையின் தேசிய ஒருமைப்பாடு, இறையாண்மை, மற்றும் ஸ்திரத்தன்மை என்பனவற்றுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியனவாக உள்ளது. இது 1987-89 காலப்பகுதியில் நாட்டின் பிளவுபட்ட இரு இனங்களிலும் உருவான கிளர்ச்சிகளையும் விட மிகவும் மோசமானது. தமிழர்கள் மற்றும் தமிழர்களின் மனக்குறைகள் என்பனவற்றுக்கு ஒரு காரணம் மற்றும் ஏதானும் மிகுதிகள் இருக்கக்கூடும், அதேநேரத்தில் கடந்த மூன்று தசாப்த காலங்களை விட அதிகமாக நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு அது பெரும் அச்சுறுத்தலாகவும் மற்றும் சிக்கலாகவும் இருந்து வருகிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தங்களை நம்புவதைக் காட்டிலும் அதிகமாக சர்வதேச சமூகத்தை நம்புகிறது. வடக்கில் வாரிச் சுருட்டியெடுத்த தேர்தல் வெற்றி இந்த பிரச்சினைகளை நம்பிக்கையுடன் கையாள்வதற்கும் மற்றும் தீர்வுகளை ஒழுங்கான முறையில் இலங்கை அரசியலமைபபு திட்டத்துக்குள் மேற்கொள்வதற்கும் ஏற்ற வாய்ப்பை அவர்களுக்குகொடுத்துள்ளது. ஆனால் அதற்கு மாறாக அவர்கள் ஒரு அரசியல் எதிர்ப்பு நிலைக்குச் சென்றுள்ளார்கள். கடந்த வருடங்கள் மற்றும் தசாப்தங்களில் மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் இன முன்னணியான ஒரு அரசியல் போராட்டத்துக்கு அஞ்சி அது ஒருபோதும் ஓடி ஒழிந்ததில்லை, அது இன்னுமொரு போராட்டத்தில் மகிழ்ச்சியுடன் இணைந்து கொள்ளும்.

ரி.என்.ஏ மற்றும் மத்தி ஆகிய இரண்டுக்கும் உடனடியாக தீர்க்கவேண்டிய அல்லது தீர்க்க முயற்சிக்கவேண்டிய தனித்தனி பிரச்சினைகள் உள்ளன. ரி.என்.ஏ மற்றும் அவர்களின் தெரிவு செய்யப்பட்ட வட மாகாணசபை அரசாங்கம் என்பனவற்றுக்கு, தங்கள் மக்களின் உடனடி கவலைகளை தீர்க்கவேண்டிய பயனுள்ள நிருவாகம் ஒன்றை நடத்தவேண்டிய அவசியம் உள்ளது.

வட மாகாணசபை, அரசியலமைப்பின் கீழ் உறுதி செய்யப்பட்ட உண்மையான அதிகாரங்களை கொண்டில்லாமல் இருக்கலாம், அதில் இப்போது உள்ளதை வைத்தே பலவற்றுக்கு தீர்வு காணலாம். இருந்தும் அவை- களை கேட்கவேண்டிய ஒரு வாய்ப்பு அவர்களுக்கு வேண்டும், அது இன்னமும் அவர்களிடம் இருக்கிறது. அரசாங்கம் அமைப்பதற்கு முன்னதாக ரி.என்.ஏ தலைமை எப்போதாவதுதான் தேசிய அளவில் வலிகளை அவர்கள் மக்களுடன் சேர்ந்து தாங்கிக் கொண்டிருக்கிறது, எல்.ரீ..ரீ.ஈ-க்கு பின்புகூட அவர்கள் அதைச் செய்ததில்லை.

ரி.என்.ஏ யின் பக்கத்திலிருந்து, அவர்கள் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்வதா அது நாடாளுமன்றத் தெரிவுக்குழு மற்றும் நாடாளுமன்றம் வழியாக இருந்தாலும்கூட அதை ஏற்றுக்கொள்வதா என்பதை அவர்கள் முடிவு செய்யவேண்டும்? அப்படியானால் அவர்கள் போர் முடிவடைந்தவுடன் அவர்கள் மத்தியுடன் ஏற்கனவே கலந்துரையாடியுள்ள அதிகாரப் பகிர்வு விடயத்துடன் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்? பொறுப்புக்கூறும் விடயங்கள் இந்த நேரத்தில் ரி.என்.ஏக்கு முக்கியமானதாக இருக்கலாம், ஆனால் அதை இங்கு தெரிவிக்கக் கூடாது. பேச்சுவார்த்தை மேசைக்கு புதிய கலந்துரையாடல்களுக்கான விடயத்துடன் சென்று எண்களையும் விபரங்களையும் சேர்த்து வெறுப்பான ஒரு நிலையை ஏற்படுத்திவிடக்கூடாது.

அரசாங்கமானது இனப்பிரச்சினையை தீர்ப்பதில் தீவிரம்காட்டி அது தொடர்பான அனைத்து தரப்பினராலும் மற்றும் அதன் பங்காளர்களாலும் கவலை தெரிவிக்கப்படும் பொறுப்புக் கூறல் விடயத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டுமானால் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசுவதைத் தவிர அரசாங்கத்துக்கு வேறு வழியில்லை. ரி.என்.ஏக்கு அவர்களின் நோக்கங்கள் மற்றும் முயற்சிகள், நம்பிக்கையானதாகவும் மற்றும் களப் பிரச்சினைகளுடன் தொடர்ச்சியானதை வெளிப்படுத்துவதாகவும் இருப்பதானால் அதை நாடாளுமன்றத்துக்கு கொண்டு செல்வதை தவிர வேறு வழியில்லை. இரண்டு பக்கத்திலும் கடந்த காலம் என்பது நிகழ்காலத்துக்கானதும் மற்றும் எதிர்காலத்துக்குமான ஆதாரமாக இருக்கிறது. மற்றவர்களைக் காட்டிலும் இவர்கள்தான் அதைப் போன்றவவைகளை அதிகம் உணர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உலகமானது இலங்கையையும், இலங்கையைப் போன்ற மற்ற நாடுகளுடனும் ஒன்று மாற்றி ஒன்றாக பல பிரச்சினைகளை கிளப்பி வருகிறது. ஐ.நா. மனித உரிமைகள் சபை ஒருமுறை இலங்கையின் போருக்கு பின்னான நடவடிக்கைகளுக்காக வாக்கெடுப்பு நடத்தியது, அது அத்துடன் நின்றிருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை. ஐநாவில் எல்லாம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. நீண்ட காலமாவதற்கு முன்பாகவே அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் நிரந்தர அமைதியை மீண்டும் நிலைநாட்ட வேண்டியும் ஏற்பட்டுள்ளது. ஐநா, இலங்கைக்கு யு.என்.எச்.ஆர்.சியை அனுப்பி ஒரு வழியில் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு பதிலாக நிரந்தர பிரச்சினைகளை உருவாக்கி அமைதியை அழித்துள்ளது.

சமாதானத்துக்கு முன்வடிவ மாதிரிகள் எதுவும் கிடையாது. அதற்கும் மேம்பாடானதும் மற்றும் சாதகமானதுமான சூழ்நிலை அவசியம். பொறுப்புக்கூறல் விடயங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. மறக்கவும் மன்னிக்கவும் முடியாத கடந்தகால ஐரோப்பிய அனுபவங்களில் இருந்து பெறப்பட்ட முன்வடிவ மாதிரிகள், சமகால நிலைகளுக்கு ஏற்றவகையில் வேறு இடங்களில் திணிப்பதற்கு பொருத்தமான முறைப்படுத்தப்பட்டதும் மற்றும் மேம்படுத்தப்பட்டதுமான உதாரணங்கள் ஆகாது. ஐரோப்பாவில் உள்ள வென்றவர் மற்றும் தோற்றவருக்கான சமன்பாடு போன்ற, வேறிடங்களில் உள்ள பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை பிரச்சினைகள், நினைவில் கொள்ள வேண்டியதும் மற்றும் பொருத்தமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியவையுமாகும்.

இலங்கையின் இலக்கு என்ன என்பதை உலகம் அதற்கு சொல்ல வேண்டும். அதைவிடுத்து ஏன் அப்படி எதற்கு அப்படி என்றெல்லாம் கேட்கக் கூடாது. இலங்கையையும் இலங்கை மக்களையும் உள்ளூர் முறை மற்றும் திட்டங்களின்படி வேலை செய்ய அனுமதிக்க வேண்டும். அப்படிச் செய்ய விடுவதன் மூலம், தரப்பட்ட நிலைமைகளுக்கு ஏற்ற கள யதார்த்தங்களை கருத்தில் கொண்டு அவர்களால் பணியாற்ற முடியும். அந்த முயற்சிகள் தோல்வியடையக்கூடாது என்னும் எண்ணத்தை முன்னதாக கொண்டு பணியாற்ற வேண்டும். இந்த நடவடிக்கைகளில் இலங்கையும் கூட முன்னர் தோல்வி அடைந்திருக்கலாம் ஆனால் எப்போதுமே தோல்விதான் ஏற்படும் என்று கருதிவிடக் கூடாது!

# லசந்த கொலை வழக்கு சூத்திரதாரி கைதாவில்லை

## கைவிரிக்கிறது பொலிஸ் திணைக்களம்

ஐந்து வருடங்களாகியும் சண்டே லீடர் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பில் உண்மை கண்டறியப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

லசந்த மணிலால் விக்ரமதுங்க கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதியன்று ரத்மலானை அத்திட்டிய என்ற இடத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தப்பிரதேசம் ரத்மலானை விமானப்படை தளம் அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு மிக அண்மையில் அமைந்துள்ளது. இந்த நிலையிலும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் லசந்த விக்ரமதுங்கவை சுட்டுக்கொன்றனர்.

எனவே இந்தப் பொறுப்பு பாதுகாப்புப் படையினரையே சாரும என்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

எனினும் இதுவரை இந்தக் கொலைக்கு காரணமானவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# நவிப்பிள்ளைக்கு பதிலளிக்க அரசின் வலுவான தயார்படுத்தல்

## போர்க்குற்றத்தின் கண்கண்ட சாட்சிகள் யார்?



(கொழும்பு)

வடக்கின் இறுதியுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான நவிப்பிள்ளையின் அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் எதிர் அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

அதேவேளை ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிரான சவால்களை முறியடிக்க பல நாடுகள் ஆதரவளிக்கும் என தென்னிலங்கை பத்திரிகை யொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி மாநாடு ஆரம்பமாகவுள்ளது. சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கியூபா, வியட்நாம் உள்ளிட்ட பல நாடுகள் இலங்கைக்கு ஆதரளிப்பதாக உறுதியளித்துள்ளன.

ஈராக் மற்றும் பாகிஸ்தானில் சிவிலியன்கள் கொல்லப்பட்டமை குறித்து கேள்வி எழுப்பப்படவுள்ளதாக அரசாங்கம் தெரவித்துள்ளது.

எனவே, இம்முறை மனித உரிமைப் பேரவை மாநாடு சர்ச்சைகள் நிறைந்ததாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் 26ஆம் திகதி நவநீதம்பிள்ளை வெளியிடவுள்ள அறிக்கைக்கு இலங்கை சவால் விடுக்கவுள்ளது.

அறிக்கையின் உண்மைத் தன்மை குறித்து இலங்கையிடம் கேள்வி எழுப்பவில்லை என அரசாங்கம் குற்றஞ் சுமத்தியுள்ளது. போர்க்குற்றச் செயல்களை நேரில் பார்த்த 2000 பேர் யார் என்பதனை வெளிப்படுத்த வேண்டுமென அரசாங்கம் கோரியுள்ளது.

# நகரங்களை நவீன மயமாக்கல் இந்த ஆண்டில் புதிய செயற்றிட்டம்

## யாழ். நகருக்கும் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

புதிய நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் யாழ். நகரம் நவீனமயப்படுத்தப் படவுள்ளது இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த வருடத்தில் மேலும் சில நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது செயற்படுத்தப் பட்டுள்ள கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்திற்கு மேலதிகமாக இந்தத் திட்டங்கள் செயறபடுத்தப்படவுள்ளன.

இதன்படி கோமாகம, மொரட்டுவ, நுகேகொட, மாத்தறை, ஊருபோக்க, இமதுவ, யாழ்ப்பாணம், கண்டி, நுவரெலியா, தியத்தலாவ, பண்டாரவளை, அநுராதபுரம், படுவஸ்நுவர, நாரம்வல, தங்கொட்டுவ, ரம்புக்கன, வீரகெட்டிய, எகலியகொட மற்றும் புலத்சிங்கள நகரங்கள் இந்த அபிவிருத்தித் திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளன.

# தேர்தல் சட்ட விதிமுறைகள் விழிப்புணர்வுக்கு ஏற்பாடு

நாட்டின் தேர்தல் முறைகள் தொடர்பாக பொது அமைப்புக்களினதும் அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தப்பட் விருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் திணைக்களமும் மேற்கொண்டு வருகிறது.

தேர்தல்கள் நடாத்தப்படுவது மற்றும் வாக்கெண்ணும் முறைமைகள் தொடர்பாகவும் தேவையான சந்தர்பத்தில் தெளிவுபடுத்த தாம் தயார் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்ரிய தெரிவித்துள்ளார்.

கம்பகா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக எந்தவொரு கட்சியும் தனிப்பட்ட ரீதியாக கோரிக்கை விடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்த புதிய அமைச்சு வேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை



போதை வஸ்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய அமைச்சு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை தோன்றி விட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி இப்போது கோரிக்கை விடுத்துள்ளது.

போதைப் பொருளைக் கட்டுப் படுத்துவதற்காக புதிய அமைச் சொன்றை நியமிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பல்வேறு விடயங்களுக்காக அரசாங்கம் புதிய அமைச்சுக்களை நியமிக்கும் அதேவேளை போதைப் பொருள் தொடரபில் அமைச்சொன்றை அமைக்க வேண்டிய தேவை இருப்பதாக அவர் சுட்டிக் காட்டினார்.

வீரகெட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசும்போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறினார்.

# போதை வர்த்தகர் மீது நடவடிக்கை பொலிஸ் அதிகாரிகளுக்கு கொலை மிரட்டல்

போதைவர்த்தகம் தொடர்பான விசாரணைகளை நடாத்திய பொலிஸ் அதிகாரிகள் மீது கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதனால் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் நாட்டை விட்டு தப்பி ஓடியுள்ளார்.

மாத்தறையில் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. தெற்கில் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடாத்தி வந்த பொலிஸ அதிகாரியே இவ்வாறு காணாமற் போயுள்ளார்.

மாத்தறை குற்ற விசாரணப் பிரிவின் பொறுப்பதிகாரி தம்பிக்க ஹபுகொட என்ற அதிகாரியே இவ்வாறு காணாற் போயுளளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல், போதைப் பொருள் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் இவர் விசாரணை நடத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழு நாள் விடுமுறை ஒன்றுக்காக இந்தியா சென்றிருந்த போது குறித்த அதிகாரி காணாமற் போயுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஏழு நாள் விடுமுறைக்காக நாட்டை விட்டு வெளியேறிய போதிலும் இதுவரையில் சேவைக்கு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த அதிகாரி இந்தியாவிலிருந்து வேறொரு நாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதற்கு முன்னரும் உயர் பொலிஸ் அதிகாரியொருவரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான பிரசாந்த ஜயகொடி அறிவிக்காமல் அவுஸ்ரேலியாவிற்கு தப்பிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமைதியைக் குலைக்க முயற்சி மேற்கு நாடுகள் மீது கண்டனம்

சமூக வலைத்தளங்கள் ஊடாக நாட்டில் கிளர்ச்சி களையும் அமைதியின்மையையும் ஏற்படுத்துவதற்கு மேற்குலக நாடுகள் சதித்திட்டம் தீட்டி வருவதாக அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

சமூக வலைத்தளங்களின் ஊடாக நாட்டில் கிளர்ச்சியை ஏற்படுத்த மேற்கத்தைய நாடுகளால் முயற்சிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேற்கத்தைய நாடுகள் சமூக வலைத்தளப் பயன்பாடு குறித்து நாட்டு மக்களுக்கு பயிற்சி அளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரின் கவனம் திரும்பியுள்ளது.

எகிப்து, டியுனிசியா போன்ற நாடுகளில் அரச விரோத செயற்பாடுகள் சமூக வலைத்தளங்களின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பிட்ட ஓர் மேற்குலக நாடுகளின் தூதரகம் யாழ்ப்பாணத்தில் காரியாலயம் அமைத்துள்ளது.

திருகோணமலையிலும் காரியாலயமொன்றை அமைக்க எடுத்த முயற்சி தோற்கடிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்கள் தொடர்பில் கண்காணிப்பதற்கு இந்திய அரசாங்கமும் கவனம் செலுத்தியுள்ளது.

அரசியல் விமர்சனங்களைச் செய்ய மக்களைத் தூண்டும் வகையில் சமூக வலைத்தளங்கள் செயற்படுகின்றன. இதே வேளை, சமூக வலைத்தளப் பயன்பாடு தொடர்பில் அமெரிக்கத் தூதரகம் பல்வேறு பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி வருவதுடன், தற்போது பயிற்சிநெறியொன்றை நடாத்தவும் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யுத்த அழிவுகளின் கணக்கெடுப்பு இடைக்கால அறிக்கை விரைவில்

(கொழும்பு)

யுத்த அழிவு தொடர்பான இடைக்கால அறிக்கை அடுத்த மாதம் வெளியிடப்படவுள்ளது.

புள்ளி விபரத்திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் போது யுத்த அழிவுகள் தொடர்பாக நாடு முழுவதும் ஏற்கனவே விசேட கண்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காணாமற் போதல்கள் தொடர்பிலான ஆரம்ப அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என புள்ளி விபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

போர் இடம்பெற்ற காலத்தில் உயிரிழந்த மற்றும் காணாமற் போனவர்கள் பற்றிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கெடுப்பு குறித்த ஆரம்ப கட்ட அறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளது. எதிர்வரும் ஐந்து வாரங்களில் முதல் கட்ட அறிக்கை வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. புள்ளி விபரவியல் திணைக் களத்தின் ஆணையாளர் நாயகம் டி.சீ.ஏ. குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

திரட்டப்பட்ட அனைத்து தகவல்களையும் கொழும்பிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. இந்தத் தகவல்க ளின் அடிப்படையில் விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# மேல்மாகாண தேர்தல்களம் சூடு மார்ச் இறுதியில் தேர்தல்



(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாத இறுதியில் மேல்மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதி நடாத்தவுள்ளதாக அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாகாண சபைகள் ஜனவரி 12ஆம் திகதியளவில் கலைக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

# வாழ்வை வளமாக்கும் வாழ்வு எழுச்சித் திட்டம்

## நோக்கம் அறிந்து செயற்பட அழைப்பு



(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களமாக நடைமுறைக்கு வருகின்றது. அந்தவகையில் ஒவ்வொரு சமுர்த்தி உத்தியோகத்தரும் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றி வைப்பது முக்கிய கடமையாகும். என ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச இணைப்பாளரும், நல்லூர் பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவருமான அம்பலம் ரவீந்திரதாசன் தெரிவித்துள்ளார்.

நாடுபூராகவுமுள்ள சமுர்த்தி அதி காரசபை தெற்கு அபிவிருத்தி சபை மலை நாட்டு அபிவிருத்தி அதிகாரசபை சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைக்கப்படும் செயற்றிட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி வங்கியை திணைக்களத்துடன் இணைக்கும் ஆரம்பநிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த சிந்தனைக்கு அமைவாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைவாக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில வாழ்வு எழுச்சி அபிவிருத்தி திணைக்களமாக வந்துள்ளது.

ஒவ்வொரு சமுர்த்தி உத்தியோகத்தரும் பொதுமக்களின் வாழ் வாதாரத்தை முன்னேற்றி வைப்பது அவர்களின் பாரிய கடமையாகும். எமது அமைச்சரின் அயராத முயற்சியினால் உங்க ளுக்கு சமுர்த்தி நியமனம் கிடைத்துள்ளது.

அதேபோல் வாழ்வின் எழுச்சி திணைக்களம் அவரது அயராது முயற்சியினால் மேற்கொள்ளப்பட்டது.

வடமாகாணத்தில் கூடுதலான அபிவிருத்தியை மேற்கொண்டவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் மகேஸ்வரன், சமுர்த்தி இணைப்பாளர் எஸ்.ரகுநாதன், நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுரேந்திரநாதன், சமுர்த்திவங்கிச்சங்கம், முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர், சமுர்த்தி மகாசங்க முகாமையாளர், பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

# களவாடப்பட்ட நகைகள் ஆலயத்திற்குள் போடப்பட்டது

மல்லாகம் பெரியதம்பிரான் ஆலயத்தில் 2011ஆம் ஆண்டு காணாமற் போன 32 பவுண் தங்க நகைகள் மூன்று வருடங்களுக்கு பின்னர் ஆலயத்திற்குள் கொண்டுவந்து நேற்றுமுன்தினம் போடப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபை யினர் தெரிவித்தனர்.

2011ஆம் ஆண்டு மேற்படி ஆலயத்திற்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 32 பவுண் தங்க நகைகளைத் திருடிச் சென்றுவிட்டதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப் பட்டிருந்தது.

இந்நிலையில், ஆலயத்திற்கு நேற்றுமுன்தினம் காலை பூசைகளை செய்வதற்குச் சென்ற பூசகர் ஆலய உள்வீதியில் தகரப்பேணியொன்று இருந்ததை அவதானித்தார். இது தொடர்பாக ஆலய பரிபாலன சபையினரின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து அவர்கள் தெல்லிப்பழை பொலிஸில் முறையிட்டுள்ளனர்.

# ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் மாதாந்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு ஆயுர்வேத பாதுகாப்புச்சபையின் மாதாந்தக்கலந்துரையாடல் வலி. வடக்கு ஆயுர்வேத பாதுகாப்புச்சபைத்தலைவர் வைத்தியகலாநிதி எஸ்.சக்திவேல் தலைமையில் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் தேசிய வைத்திய முறையினைப் பாதுகாத்தல் அபிவிருத்தி செய்தல் இவ் வைத்தியத்துறையில் ஈடுபாடுள்ள வைத்தியர்களை பொருளாதாரத் துறைகளிலும் சமூக தராதரத்திலும் மேம்படுத்தல், அவர்களின் நலன்களுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல, வைத்தியர்கள் பற்றியும் அவர்களது சிகிச்சை முறை பற்றியும் தரவு சேகரித்தல் இவற்றைப் பொது மக்களுக்கு தெரியப்படுத்தல் இப்பிரதேசத்தில் பயிரிடக்கூடிய மூலிகைகளைப் பற்றிய விபரங்களைச் சேகரித்தல், ஆயுர்வேத கல்வி நடவடிக்கைகளை ஒழுங்கமைத்து அதனை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் தேசிய மருந்து உற்பத்தியினை முறைப்படுத்தவும் மேம்படுத்தவும் உரிய நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் நானாவித வைத்திய முறைகளை அறிந்து இவற்றைப் பாதுகாத்தல் மேம்படுத்தல் மற்றும் ஆரம்ப சுகாதார நலன் பேணல் போன்ற செயற்பாடுகளினை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. (63)

# உங்களின் தொழில் தெரிவுக்கு வழிகாட்டும் ஜோதிடம்

ஜோதிர் வித்யாரத்னா
வி.ஏ.சிவராசா

## பிறந்த திகதிகள் 04,13,22,31

பிறர் உள்ளத்தை உறையவைக்கும் தீவிரமான கருத்துக்களை வெளியிடுவதன் மூலம் புகழ்தக்க வைக்கும். பிரசங்கம் புரிதல், எழுத்துத்துறை, தத்துவ ஆராய்ச்சி, சேர்க்கஸ் முதலிய சரீரப்பயிற்சிகள், வைத்தியம், ஜோதிடம், சங்கீதம், நாட்டியம், அரசுத்தொழில், முதலியன பலிதமாகும். இவர்களுக்கு மிக்க அதிர்ஷ்டமான தொழில் மற்ற மனிதர்களைத் தூண்டிவிடுதலும் அவர்களது சிந்தனையை உபயோககரமாகத்திருப்புதலுமேயாகும். ஆராய்ச்சியும் தேடுதலும் இவர்களுக்கு கைவந்த கலையாகும்.

தரகுத்தொழிலில் கொடி கட்டிப்பறப்பார்கள். கால் நடைகள், பறவையினங்கள் வளர்த்தல், நாலுகால் பொருட்கள் விற்றல், பத்திரிகைத் துறை, படங்கள் தயாரித்தல், நூல்கள் பிரசுரம், மனை அமைத்தல், போட்டிப்பந்தயங்கள் நடாத்துதல் என்பவற்றால் பணஞ்சம்பாதிக்கலாம். அரசியலிலும் செய்கின்ற எல்லாத் தொழில்களிலும் சீர்திருத்தம் இவர்களால் ஏற்படும்.

(தொடரும்)




வட்டு இந்து வாலிபர் சங்கத்தினால் பரந்தன் பிரதேசத்தில் வசிக்கின்ற குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக 80 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக கிணறு ஒன்று அமைத்து வழங்கப் பட்டது. (54)

# முரசின் இன்றைய பலன்



(06.01.2014 திங்கட்கிழமை)

விஜய வருஷம் மார்கழி மாதம் 22 ஆம் திகதி.
ஷஷ்டி விரதம். பூரட்டாதி நட்சத்திரம் பி.இ. 03.18 வரை.
பஞ்சமி / ஷஷ்டி. மரணயோகம்.
இராகுகாலம் 08.01 - 09.31 வரை. சுபநேரம் 12.31 - 02.01 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** – பரீட்சை முடிவுகள் சாதகமாக அமைந்ததினால் வெளியூர் சென்று கல்வி கற்க முற்படல்.

**ரிஷபம்** – விவாக முயற்சி ஒப்பேறியதில் ஆனந்தமடைதல், தொலைக் காட்சியைப் பார்க்க விடாமல் பூட்டி வைத்ததால் குடும் பத்தில் ரகளை ஏற்படல்.

**மிதுனம்** – ஒய்வு பெற்ற பின்னர் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பணிக்குச் செல்லல், தொலைந்த ஆவணம் தீவிரமான தேடுதலின் பின்னர் கைக்கு வந்து சேர்தல்.

**கடகம்** – நிலுவை வசூலிக்கச் சென்றதால் அலைச்சலும் அகாலபோஜனமும் ஏற்படுதல், பிரயாணத்தில் கைத் தொலைபேசி பாவனையால் வீதியில் விபத்து ஏற்பட்டு அங்கம் பாதிக்கப்படல்.

**சிம்மம்** – பணியாளர் மீது அவநம்பிக்கை ஏற்பட்டதால் வேலையினின்றும் நீக்கிவிடல், விவாகத்திற்காக வெளிநாட்டினின்றும் தாயகம் வந்தடைதல்.

**கன்னி** – பிறரை நம்பி முக்கிய வேலைத்திட்டமொன்றை ஒப்படைத்ததால் பிரச்சினை அற்றுப்போதல், விரிசலடைந்திருந்த மாமன்மாரின் உறவில் சுமுக நிலை ஏற்படுதல்.

**துலாம்** – வியாபாரத்தை கைவிட்டு வெளிநாடு செல்ல முயற்சித்தல், அத்தியாவசியச் செலவுகள் மேலோங்கியதால் கடன்படும் நிலைக்குச் செல்லல்.

**விருச்சிகம்** – குடும்பக் கருமங்களில் ஒத்தாசைபுரிய நேரிடுவதால் மகிழ்வு தக்கவைத்தல், தேங்கிக் கிடக்கும் பொருட்களை விற்பனை செய்ய புதிய யுக்தியை யோசித்தல்.

**தனுசு** – விவாகம் ஒப்பேற தரகர்களைச் சந்திக்கும் முயற்சியில் ஈடுபடல், விலகிச் சென்ற உறவினர்கள் மனம் மாறி மீண்டும் உறவுக்கு கை கொடுப்பார்கள்.

**மகரம்** – திறப்பு விழாக்களில் தம்பதியர் சகிதம் பங்கு கொண்டு சிறப்பித்தல், சுபகாரியங்கள் நடந்தேறிய தினத்தில் பொருட்கள் திருட்டுப் போனதால் கவலையுறல்.

**கும்பம்** – நீண்ட காலம் புத்திரபாக்கியம் கிட்டாமையினால் வைத்திய ஆலோசனைகள் பெறமுஸ்தீபு, புதிய ஒப்பந்தங்களை எற்படுத்துவதாவிடுவதா என்ற மனப் போராட்டத் தில் சிக்கித்தவிக்கும் நிலையுண்டு.

**மீனம்** – பணக் கொடுக்கல் வாங்கலில் எழுத்து மூலமான உறுதிப்பாட்டை மேற்கொள்ளல் நன்று, பிதாவழிச் சொத்தினைப் பங்கீடு செய்வதில் முரண்பாட்டினை எதிர்பார்க்கவும்.



# சம்பியன்

(ஒக்லாண்ட்)

நியூசிலாந்தில் நடந்த ஒக்லாந்து ஓப்பன் டபுள்யு.டி.ஏ போட்டியின் ஒற்றையர் பிரிவில் சேர்பிய வீராங்கனை அனா இவானோவிச் சம்பியன் பட்டம் வென்றார். பரபரப்பான இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்சுடன் நேற்று முன்தினம் மோதிய இவானோவிச் 6-2 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றினார். இரண்டாவது செட்டிலும் அதிரடியாக விளையாடிய அவர் 5-3 என முன்னிலை பெற்ற நிலையில், உறுதியுடன் போராடிய வீனஸ் கடும் நெருக்கடி கொடுத்தார். வீனஸ் தொடர்ச்சியாக 4 கேம்களை வென்று 7-5 என்ற கணக்கில் 2ஆவது செட்டை வசப்படுத்தினார்.

இதனால் வெற்றி யாருக்கு என்பதை தீர்மானிக்கும் கடைசி செட் ஆட்டத்திலும் அனல் பறக்க, முன்னாள் முதல்நிலை வீராங்கனைகள் மோதிய இந்த இறுதிப் போட்டி இரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது. மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில், இவானோவிச் 6-2, 5-7, 6-4 என்ற செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக பட்டம் வெல்ல முடியாமல் தடுமாறி வந்த அவர், நேற்று முன்தினம் தனது 12ஆவது டபுள்யு.டி.ஏ பட்டத்தை வென்று சாதித்தார்.

வீனஸுடன் கடைசியாக மோதிய 9 போட்டிகளில் இவானோவிச் 8 தோல்விகளைச் சந்தித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஆரம்பமே அமர்களம்தான்



(பிரிஸ்பேன்)

பிரிஸ்பேன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவில், உலகின் முதல்நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் தொடர்ந்து இரண்டாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

அவுஸ்ரேலியாவில் உள்ள பிரிஸ்பேன் நகரில், சர்வதேச ரென்னிஸ் தொடர் நடைபெற்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான பெலாரசின் விக்டோரியா அசரன்காவை எதிர்கொண்டார்.

முதல் செட்டை 6-4 எனக் கைப்பற்றிய செரீனா, பரபரப்பான இரண்டாவது செட்டை 7-5 என போராடி வென்றார். முடிவில் செரீனா வில்லியம்ஸ் 6-4, 7-5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, தொடர்ந்து இரண்டாவது முறையாக (2013, 2014) சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். கடந்த ஆண்டு நடந்த இறுதிப் போட்டியில், செரீனா, ரஷ்யாவின் அனஸ்டாசியாவை வீழ்த்தினார்.

# குலசேகரா விலகல்

(அபுதாபி)

இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான 3 டெஸ்ட் கொண்ட தொடர் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்று வருகிறது. அபுதாபியில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டி சமநிலையானது.

இந்த நிலையில் காயம் அடைந்த இலங்கை வேகப்பந்து வீரர் குலசேகரா இந்த டெஸ்ட் தொடரிலிருந்து விலகியுள்ளார். இது இலங்கைக்கு மிகப்பெரிய பின்னடைவாக கருதப்படுகிறது. 2ஆவது டெஸ்ட் டுபாயில் நாளை மறுதினம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதல் டெஸ்டில் இளம் வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டமை மகிழ்ச்சி அளிக்கிறது. இருப்பினும் குலசேகரா போன்ற அனுபவ வீரர் விலகுவது அணிக்கு இழப்பு என இலங்கை அணிக் கப்டன் மத்தியூத் தெரிவித்தார்.

# கட்டாரில் கிண்ணம் வென்ற நடால்




(கட்டார்)

கட்டார் திறந்த ரென்னிஸ் போட்டித் தொடரின் சம்பியன் பட்டத்தை நடால் கைப்பற்றிக்கொண்டார்.

கட்டார் திறந்த ரென்னிஸ் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் கட்டாரில் நடைபெற்றது. இதில் முதல் நிலை வீரர் நடாலும், பிரான்ஸின் கொயில் மொன்பில்ஸூம் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நடால் 6-1, 6-7, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டார்.

# றொனால்டோவுக்கு விருது



போர்த்துக்கலின் புகழ்பெற்ற கால்பந்து வீரர் கிறிஸ்டினோ றொனால்டோவுக்கு, அந்த நாட்டின் உயரிய விருதான இளவரசர் ஹென்றி விருது வழங்கப்படவுள்ளது.

இதனை போர்த்துக்கல் ஜனாதிபதி அனி பல் கவாகோ சில்வாவிடம் இருந்து நாளை செவ்வாய்க்கிழமை றொனால்டோ பெற்றுக் கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

28 வயதான கிறிஸ்டினோ றொனால்டோ, போர்த்துக்கலின் தேசிய அடையாளமாக மதிக்கப்படுவதாக, அந்த நாட்டின் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# மாற்றமில்லை

ACC
ASIAN CRICKET COUNCIL

ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளை பங்களாதேஷிலேயே நடாத்துவதற்கு கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கூடிய ஆசிய கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

திட்டமிட்டபடி, எதிர்வரும் பெப்ரவரி 25ஆம் திகதி முதல் மார்ச் 7ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் போட்டிகள் நடைபெறும் என்றும், போட்டிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி எல்லா நாடுகளுக்கும் விளக்கமளித்துள்ளதாக ஆசிய கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரி அஷாரபுல் ஹக் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் தற்போது நிலவும் அரசியல் குழப்ப நிலைமைகள் காரணமாக ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிகளை அங்கு நடாத்தமுடியுமா என்று ஆராய்வதற்கான கூட்டம் கொழும்பில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

இம்முறை ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்காக ஆப்கானிஸ்தான் அணியையும் சேர்த்துக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் ஆசிய கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரி தெரிவித்தார்.

ருவென்ரி-20 உலகக் கிண்ணப் போட்டிகள் மற்றும் 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு முன்னதாக, ஆப்கானிஸ்தான் அணிக்கு இந்தப் போட்டி சிறந்த முன்பயிற்சியாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் அணி இம்முறை ஆசிய கிண்ணப் போட்டிகளில் பங்கெடுப்பதன் மூலம் போட்டிகளின் எண்ணிக்கை 7 இலிருந்து 11 வரை அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய கிரிக்கெட் நிர்வாக அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

முன்னதாக, ஆசிய கிண்ணப் போட்டிகளை பங்களாதேஷில் நடத்துவதில் சிக்கல் இருந்தால், இலங்கையில் நடாத்துவதற்குத் தயார் என்று இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளையடிப்புச் செய்யப்பட்டது இங்கிலாந்து

(சிட்னி)

இங்கிலாந்து அணிக்கெதிரான சிட்னி டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 281 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரை அவுஸ்ரேலிய அணி5-0 என்ற கணக்கில்முழுமையாகக் கைப்பற்றி இங்கிலாந்திற்கு வெள்ளையடிப்புச் செய்துள்ளது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி அவுஸ்ரேலியாவின் சிட்னியில் நடைபெற்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி 326 ஓட்டங்களையும், இங்கிலாந்து அணி 155 ஓட்டங்களையும் பெற்றது.

171 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 276 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ் ரோஜர்ஸ் 119, ஜோர்ஜ் பெய்லி 46, ஹடின் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்கொட் போர்த்விக் மூன்று, அண்டர்சன், ஸ்ரூவெர்ட் புரொட், பென். ஸ்ரோக்ஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் 448 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி ஹரிஸின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கார்பேறி 43, ஸ்ரூவெர்ட் புரொட் 42, பென். ஸ்ரோக்ஸ் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிஸ் ஐந்து, ஜோன்சன் மூன்று, நதன் லயன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் அவுஸ்ரேலிய அணி 281 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இப்போட்டி மூன்று நாட்களில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரை 5-0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றி இங்கிலாந்திற்கு வெள்ளையடிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. போட்டியின் ஆட்டநாயகனாக ஹரிஸ், தொடர் நாயகனாக ஜோன்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.






## இன்றைய ஆட்டங்கள்

(அராலி)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு அராலி மாவத்தை விளையாட்டுக்கழகத்தினால் மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது.

இப்போட்டித் தொடரில் இன்றைய தினம் மோதவுள்ள அணிகளின் விபரம் வெளியிடப் பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

மாவத்தை யுத் அணியை எதிர்த்து சுழிபுரம் அம்பாள் அணியும், தொடர்ந்து நடைபெறும் போட்டியில் சங்கானை நியூஸ்ரார் அணியை எதிர்த்து அராலி நிலா ஒளி அணியும் மோத வுள்ளன. (93)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனு சரணையுடன் சுன்னாகம் நியூவொரியஸ் விளை யாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் கந்தையா நல்லதம்பி நினைவு கால்பந்தாட்டத் தொடர் நியூவொரியஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

அணிக்கு ஐந்து பேர் கொண்ட இக் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் லீக் அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் இன்றைய தினம் இரண்டு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இதில் முதல் போட்டியில் வதிரி டையமன்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் தொடர்ந்து நடைபெறும் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் அணியும் மோதவுள்ளன. (93)

## கனிஸ்ரன், நிரோஜன், நிருபன் சிறப்பாட்டம்
# யாழ். மத்தி பெரு வெற்றி

(யாழ்ப்பாணம்)

யூலியஸ் கனிஸ்ரன், நிரோஜன், நிருபன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 128 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி அணிக்குமிடையிலான போட்டி கடந்த 3,4ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மத்திய கல்லூரி அணி முதல் நான்கு விக்கெட்டுக்களையும் விரைவாகப் பறி கொடுத்தது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த யூலியஸ் கனிஸ்ரன், நிரோஜன் இணை மிகவும் சிறப்பான முறையில் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இந்த ஜோடி 56 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக 60 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யூலியஸ் கனிஸ்ரன் 90 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 77, நிரோஜன் 80 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள் அடங்கலாக 72, டினோஜன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பாலபிரசாத் மூன்று, சுஜிதரன், ஜெனஸ்ஷன், மிதுசன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி நிருபனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மள மளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி அணி முதல் இனிங் ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெனஸ்ஷன் 34, துவாரகன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிருபன் 14 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு, அலன்ராஜ் 30 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

146 ஓட்டங்கள் முன்னிலையில் இரண் டாவது இனிங்ஸிற்காக ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி 30 ஓவர்களை எதிர்கொண்டு ஆறு விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண் டது. இதில் டினோஜன் 28, சௌமிதரன் 37, யுனியஸ் கனிஸ்ரன் ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெனஸ்ஷன் 30 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, கரி 39 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

256 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங் ஸிற்காக ஆடிய ஸ்கந்தவரோதயக் கல் லூரி அணி விரைவாக ஓட்டங்களைக் குவிக்க முற்பட்டது. குறிப்பாக, கரி, ஜெனஸ்ஷன் ஆகியோர் மத்திய கல் லூரி அணியின் பந்து வீச்சை சிறப்பாக எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவித்தனர். மறுபுறம் மத்திய கல்லூரி அணியால் விக்கெட்டுக்களும் சாய்க்கப்பட்டது. இறுதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக 59 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக் கெட்டுக்களையும் இழந்து 129 ஓட்டங் களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவி யது. இதில் கரி 65, ஜெனஸ்ஷன் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யூனியஸ் கனிஸ்ரன் மூன்று, மதுசன், நிருபன் தலா இரண்டு விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர். இதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 128 ஓட் டங்களால் வெற்றிபெற்றது.(எஸ்.பி., 48)

# கடற்கரை கரப்பந்தாட்டம் ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் முதன் முறை யாக நடாத்தப்படவுள்ள கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 11,12ஆம் திகதிகளில் காரைநகர் கடற்கரையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரில் ஆவரங்கால் மத்தி, ஆவரங்கால் இந்து இளைஞர், உடுப்பிட்டி நவஜீவன்ஸ், காங்கேசன்துறை ஐக்கியம், அரியாலை ஐக்கியம், புத்தூர் வளர்மதி, சங் கானை ஐக்கியம், சிறுப்பிட்டி ஜனசக்தி, எழுவைதீவு பார்த்திமா போன்ற அணிகள் பங்குகொள்ளவுள்ளன.

இப்போட்டிக்கான நிரலிடல் 11ஆம் திகதி காலை 8.30 மணிக்கு இடம்பெறும் எனவும், மேற்படி பங்குகொள்ளவுள்ள அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தருமாறும் போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக இப்போட்டி நடாத்தபடவிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகவும், இதன் மூலம் சிறந்த கடற்கரை கரப்பந்தாட்ட வீரர்கள் உருவாவதற்கான வழிகளை மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினர் தெரி வித்துள்ளனர். (93)

விளையாட்டுச் செய்திகள்

## கூடைப்பந்து சங்கம் உதயம்

முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இதின் தலைவராக ஜெயந்தன், உப தலைவர்களாக கஜசயன், செல்வச்சந்திரன்,, செயலாளராக தூமல் ராஜ், பொருளாளராக லலிதரன், தொழில்நுட்ப ஆலோசகராக முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி தனுராஜ் ஆகியோர் தெரிவு செய் யப்பட்டுள்ளனர். இவர்களின் செயற்பாடு இந்தாண்டு முழு வீச்சில் தொடரும் என அதன் தலைவர் ஜெயந்தன் தெரிவித்துள்ளார். (93)



ஆசியா ஜேர்மன் விளையாட்டுத்துறை பரிமாற்றத் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட அகில இலங்கை ரீதியிலான மேசைப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டிகளில் பங்குபற்றி பல பரிசில்களை ஆனைக்கோட்டை றோ.க.த பாடசாலை அணி வீரர்கள் பெற்றுக்கொண்டனர். மேசைப்பந்தாட்டத்திற்கான பெரும்பாலான வழங்கள் இல்லாத நிலையிலும் மேற்படி வீரர்கள் பல வெற்றிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. வெற்றியீட்டிய வீரர்கள் விருந்தினர்களுடன் நிற்பதைக் காணலாம். (48)

# வலைப்பந்து பரீட்சை சித்தியடைந்தோர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட ஏ மற்றும் பி தர வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான எழுத்துப் பரீட்சையில் வட மாகாணத்தில் 16 பேர் சித்தியடைந்துள்ளதாக யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் செல்வி சி.சுரேந்தினி தெரிவித்தார்.

இதில், ஏ தரப் பரீட்சையில் அ.பவானி, ம.மதி வதனன், இ.சசிக்குமார், ர.ஸ்ரீரமணன், ந.மதியழகன், அ.கமலக்குமரன், ப.ஜெயகரன், ஆகிய 7 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

பி தரப் பரீட்சையில் து.கௌரி, ந. செந்தூரன், பொ.சகிலன், ச.சியாமா, ச.மைதிலி, கெ.செந்தில் குமரன், எஸ்.கரன், ஜெ.சுதாகரன், ஏ.பிரபாகரன் ஆகிய 9 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த 16 பேருக்கும் செயன்முறைப் பரீட்சை நடைபெறவுள்ளதாக செயலாளர் மேலும் தெரிவித்தார். (93,48)

## வித்தியானந்தா, புதுக்குடியிருப்பு மத்தி
# நாளை மோதல்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மற்றும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி களுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக் கெட் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற வுள்ள இப்போட்டி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு கல்லூரி களிலும் பலமான அணி என்பதால் இப்போட்டி விறுவிறுப்பு நிறைந்த ஆட்டமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தமிழீழம் என்பது அடிப்படையிலேயே இனவாதக் கோரிக்கை; சாத்தியம் இல்லாதது!

- 'இந்து' ராம் பேட்டியிலிருந்து-

தமிழ் மக்கள் பிரச்சினைகளில் நீங்களும் சரி "தி இந்து"வும் சரி தமிழ் விரோத அணுகுமுறையோடே செயல்படுகிறீர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?

**ராம்:** இந்தக் கேள்விக்குக் கொஞ்சம் விரிவாகப் பதில் அளிக்க விரும்புகிறேன். ஓர் உண்மை தெரியுமா? இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி இந்திய அளவில் வேறு எந்தப் பத்திரிகையைவிடவும் அதிகமாக எழுதியிருப்பது "தி இந்து"தான். அதிலும் 1983 இனப்படுகொலைக்குப் பின், தமிழ் ஆயுதக் குழுக்களின் செயல்பாடுகளையும் தமிழர் போராட்டங்களையும்பற்றி விரிவான செய்திகளையும் கட்டுரைகளையும் "தி இந்து" வெளியிட்டிருக்கிறது.

நானும் டி.எஸ். சுப்பிரமணியனும் சேர்ந்து எடுத்த பிரபாகரனின் விரிவான பேட்டி இந்திய அளவில் பேசப்பட்ட ஒன்று. ஜெயவர்த்தனா அதிபராக இருந்தபோது "தி இந்து" செய்தியாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் கடுமையான சட்டப் பிரிவுகளின் கீழ் கைதுசெய்யப்பட்டார். நான் கொழும்பு சென்று ஜெயவர்த்தனாவுடன் பேசினேன்; சர்வதேச பத்திரிகையாளர் சந்திப்பில் குரல் எழுப்பினோம்; அவர் விடுவிக்கப்பட்டார். இவை எல்லாம் வரலாறு.

விடுதலைப் புலிகளை ஆரம்பத்தில் நாங்கள் பரிவோடுதான் அணுகினோம் அவர்களுடைய் நியாயங்களை எழுதினோம். ஆனால், மிகவிரைவிலேயே அவர்கள் மிகக் குரூரமாகத் தங்கள் முகத்தை வெளிப்படுத்தினார்கள். ஏனைய ஆயுதக் குழுக்கள், போராட்டத் தலைவர்கள் எல்லோரையும் அழித்தொழித்தார்கள். பின், வெவ்வேறு காலகட்ட உரையாடல்களின்போது பிரபாகரனின் அரசியல் அறியாமையும் அவருடைய நோக்கங்களும் புரிந்து விட்டன. உண்மையில், பிரபாகரன் ஒரு போல் பொட்டிஸ்ட்.

துப்பாக்கிகள் மீது அவருக்கு இருந்த நம்பிக்கையில் துளியும் பேச்சுவார்த்தைகளிலோ ஜனநாயகத்திலோ இல்லை. ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளின்போதே இது எனக்குத் தெளிவாகி விட்டது. தொடர்ந்து அவர்கள் நடத்திய அரசியல் படுகொலைகள், செய்த அட்டூழியங்கள், பேச்சுவார்த்தைகளில் அவர் வீணடித்த பொன்னான வாய்ப்புகள், எல்லாவற்றுக்கும் மேல் முன்னாள் பிரதமர் ராஜீவ் படுகொலை புலிகளை எதிர்த்து எழுத இவை எல்லாம்தான் காரணங்கள். புலிகள் எதிர்ப்பு என்பது எப்படி இலங்கைத் தமிழர்கள் அல்லது தமிழ் விரோதப் போக்காகும்?

எது உண்மையில் சாத்தியமோ, எது உண்மை நிலையைப் பிரதிபலிக்கிறதோ அதையே எழுதுகிறோம். போலித்தனமோ, இரட்டை வேடமோ போடுவது இல்லை.

புலிகள் எதிர்ப்புதான் தமிழீழ எதிர்ப்பாகவும் உருவெடுத்ததா?

**ராம்:** இல்லை. தொடக்கம் முதலே "தி இந்து" தனித் தமிழீழம் என்ற கருத்தாக்கத்தை எதிர்த்தே வந்திருக்கிறது. இந்தியாவின் அயலுறவுக் கொள்கையும் அதுதான். அரசியல் சாத்தியமே இல்லாதது தமிழீழம்; அது அமைந்தால் நல்லதும் அல்ல.

தமிழீழம் சாத்தியம் இல்லை; நல்லது இல்லை என்று எந்த அடிப்படையில் சொல்கிறீர்கள்?

**ராம்:** அடிப்படையிலேயே இனவாதக் கோரிக்கை அது. இங்கிருந்து நாம் இலங்கைத் தமிழர்கள் என்ற சொல் வழியே பார்க்கும் மக்கள் வேறு; அங்குள்ள மக்கள் வேறு. மலையகத் தமிழர்கள் தனித்திருக்கிறார்கள், தமிழ் பேசும் முஸ்லிம்கள் தனித்திருக்கிறார்கள் அவர்களுடைய பிரச்சினைகள் இங்கு பேசப்படுவது இல்லை. ஈழத்தின் பரப்பாகக் கேட்கப்பட்ட வட - கிழக்கு மாகாணங்களை எடுத்துக்கொண்டால், கிழக்கு மாகாணத்தில் மூன்றில் இரு பங்கினர் தமிழர் அல்லாதவர்கள்; வட பகுதியோடு இணைவதில் விருப்பம் இல்லாதவர்கள் அவர்களுடைய நியாயங்களை விவாதிக்க இங்கு அனுமதிக்கப்படுவது கூட இல்லை.

அப்புறம், அரசியல்ரீதியாக, பொருளாதாரரீதியாக, புவியரசியல்ரீதியாக நீடிக்க வாய்ப்பே இல்லாதது அது. முக்கியமாக, வியூக முக்கியத்துவம். அந்தப் பகுதியை இராணுவரீதியாக யாரும் விட்டுவைக்க மாட்டார்கள் - ஒருபோதும் அது நீடிக்க முடியாதது. கடைசியில் அதுதான் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்பின் கீழ், சுயாட்சிக்கு இணையான உச்சபட்ச அதிகாரப் பகிர்வுதான் இலங்கைத் தமிழர்களுக்கு அமைதியையும் நன்மைகளையும் தருமேயன்றி பிரிவினை அல்ல.

இறுதிப்போரில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டதும் போர்க் குற்றங்கள் நடந்ததும் இப்போது அம்பலமாகிவிட்டது. என்ன சொல்கிறீர்கள்?



**ராம்:** போர்களை ஆதரிப்பவன் அல்ல நான். முன்னரே சொன்னேன் - பிரிவினையும் துப்பாக்கிகளும்தான் தீர்வு என்ற முடிவில் பிரபாகரன் தீர்மானமாக இருப்பதை உணர்ந்த பின்தான் விடுதலைப் புலிகளைக் கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்தேன் என்று. இறுதிப் போரின்போது நடந்த மனித உரிமை மீறல்கள் மிகப் பெரிய துயரம். போர்க் குற்றங்கள் இரு தரப்பினராலுமே நடத்தப்பட்டிருக்கின்றன. நிச்சயம் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசே நடவடிக்கை எடுக்க ராஜபக்ஷ தயக்கமின்றிச் செயல்பட வேண்டும். அதேசமயம், இந்த விவகாரம் மட்டும் பிரதானம் இல்லை‚ மீள்கட்டமைப்பும் உச்சபட்ச அதிகாரப் பகிர்வும் வேண்டும். அவைதான் தமிழர்களின் எதிர்கால நலனை நிர்ணயிக்கும்.

# பகல் நேர குட்டித் தூக்கம் கற்கும் ஆற்றலை அதிகரிக்கும்!

படிக்கும் மாணவர்களுக்கு பகல் நேர குட்டித் தூக்கம் கற்கும் ஆற்றலை அதிகரிக்கும்.

தற்போது எமது பிரதேசத்தில் மாணவர்களுக்கு போதுமான ஓய்வோ அல்லது அவர்களின் ஏனைய செயற்பாடுகளுக்கான நேரமோ ஒதுக்கப்படாமல் அவர்களை முழு நேரக் கல்விச் செயற்பாடுகளுக்காக மட்டும் நிர்ப்பந்திக்கப்படும் நிலைமை உருவாகியுள்ளது. இது அவர்களின் கற்றலையும் ஆளுமை வளர்ச்சியையும், அவர்களின் எதிர்கால ஆற்றலையும் எவ்வாறு பாதிக்கப் போகிறது என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.



மாணவர்களுக்கு ஓய்வும் பகல் நேர குட்டித்தூக்கமும் எவ்வளவு தூரம் கற்றல் செயற்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கும் எனப் பல ஆய்வுகள் உலகளாவிய ரீதியில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. வளர்ந்தவர்களுக்கும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும் மதிய நேர ஓய்வும் குட்டித்தூக்கமும் மூளைத்திறன் விழிப்புணர்ச்சியை அதிகரிக்கச் செய்யும் என ஆய்வுகள் நிரூபித்துள்ளன. மழலைகளிலும் இவ் ஆராய்ச்சி நடத்தப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

மூன்று வயது முதல் ஐந்து வரையிலான மழலைக் குழந்தைகளை மதியம் ஒரு மணி நேரம் ஒரு குட்டித் தூக்கம் போடவைத்தால் அது அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துகிறது என்று அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

மதியச் சாப்பாட்டிற்குப் பிறகான இப்படியான தூக்கம் குழந்தைகளின் மூளைத்திறனை மேம்படுத்துவதாக இந்த ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மூன்று வயது முதல் ஐந்து வயது வரையிலான குழந்தைகள் மதியம் ஒரு மணி நேரம் தூங்கி எழுந்தால், அவர்கள் தங்களின் மழலைப் பருவ பாடங்களை நன்றாக நினைவில் வைத்திருப்பதாக இந்த ஆய்வில் தெரியவந்திருக்கின்றது. இயற்கை விஞ்ஞானத்துக்கான தேசியக்கழகத்தின் விஞ்ஞான சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருக்கும் இந்த ஆய்வின் முடிவுகள் 40 சிறார்களிடம் "மேச்சசூசெட்ஸ் ஹம்ஹஸ்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் அடிப்படையில் எட்டப்பட்டிருக்கிறது.

இப்படி மதியம் தூங்கி எழுந்த குழந்தைகளின் மூளைத்திறன் மேம்பாடு மதியம் தூங்கி எழுந்த பின்னர் அதிகரிப்பதுடன் மறுநாளும் இது நீடிப்பதாகவும் இவர்கள் கண்டறிந்துள்ளார்கள்.

குழந்தைகளின் நினைவாற்றலை ஸ்திரப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கும் ஆரம்பகால கற்றலுக்கும் இந்த மதிய தூக்கம் அவசியமாகிறது என்பது இந்த ஆய்வாளர்களின் கருத்து.

மதிய உணவிற்குப் பின் தூங்க அனுமதிக்கப்பட்ட குழந்தைகள் தூங்கி எழுந்ததும் காலையில் கண்களால் பார்த்து அதன் மூலம் கற்றவற்றை நினைவு கூர்வதில் சிறப்பாகச் செயற்பட்டதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். மேலும் இதே குழந்தைகளை மதிய நேரம் தூங்க விடாத போது அவர்களின் கற்றல் திறன் குறைவதைக் கண்டறிந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். குழந்தைகளுக்கு வயதாக இந்த மதிய நேர தூக்கம் என்பது இயற்கையிலேயே இல்லாமல் போகும் என்றும், மழலையர் பள்ளிகளில் குழந்தைகளை மதிய நேரத்தில் தூங்க அனுமதிக்க வேண்டும் என்றும் ஆய்வாளர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

(நன்றி: Jaffna Diabetic Centre)

## UNESCO அறிவித்த உலக நாடுகளின் சிறப்புக் கல்வித்தரம்!

1. பிழையின்றிப் படித்தல் - நியூசிலாந்து
2. குழந்தைப் பருவத்தில் கல்வி ஈடுபாடு - இத்தாலி
3. கணிதக் கல்வி - நெதர்லாந்து
4. விஞ்ஞானக் கல்வி - ஜப்பான்
5. பன்மொழிகளிலும் கல்வியறிவு - நெதர்லாந்து
6. கலை சம்பந்தப்பட்ட கல்விகள் - அமெரிக்கா
7. உயர்நிலைப் பள்ளிகளில் கல்வித்தரம் - ஜெர்மனி
8. ஆசிரியர் பயிற்சி - ஜேர்மனி
9. மேல்நிலைக் கல்வி - அமெரிக்கா
10. முதியோர் கல்வி - ஸ்வீடன்

# அணு ஆயுதப் போர் - தப்பிக்கும் வழிகள்

- ப.சரவணன் -

உலக நாடுகள், தங்களுக்குள் போர் செய்யும் போது, அணு ஆயுதங்களை பயன்படுத்தினால், ஏராளமான உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் ஏற்படுவதோடு, எதிர்கால சந்ததியினரையும் கடுமையாகப் பாதிக்கும்.

இரண்டாம் உலகப் போரின் இறுதிக் கட்டத்தில்தான் அணு ஆயுதத்தைப் பயன்படுத்தினார்கள். ஆனால், மூன்றாம் உலகப் போர் அல்லது அடுத்த இந்தியா - பாகிஸ்தான் போர் நடைபெற்றால், அதன் தொடக்கத்திலேயே அணு ஆயுதம் பயன்படுத்தப்படலாம். அப்போரில் பரிதாபமாகப் பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்களே.

அணு ஆயுதத்தின் கொடூர விளைவுகளைப் பற்றித் தெரிந்துகொள்ள கூகுள் உதவியால், ஜப்பானில் ஹிரோசிமா, நாகசாகி நகரங்களில் விழுந்த அணுகுண்டுகளின் பின்விளைவுகளைப் பார்க்கவும். அவை சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்ட அணுகுண்டுகள். இப்போது போர் மூண்டால் 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தயாரிக்கப்பட்ட நவீன அணுகுண்டுகள்தானே பயன்படுத்தப்படும். அவற்றின் தாக்கம் 50 மடங்குகளுக்கும் அதிகமாக இருக்கும்.


உலக மக்கள் அனைவரும் அமைதியைத்தான் விரும்புகிறார்கள். ஆனால், உலக அரசுகள் அவ்வாறு விரும்புகின்றனவா? சின்ன நாடுகள் கூடத் தன் வலிமையை ஆயுதத்தின் வழியாகத்தான் உலகுக்குக் காட்ட விரும்புகின்றன. உலகப் போர்களைப் பேசித் தீர்த்துக்கொள்ள எந்த நாடும் விரும்புவதில்லை. எந்த நாடும் தன் ஆயுதப் பலத்தால்தான் பெரும்போர்களை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளன. அணு ஆயுதத்தால் விளையும் அமைதிமயான அமைதி. அந்த அமைதியைத் தரிசிக்க சவப்பெட்டிக் கடைக்காரர்கள் கூட மிஞ்சமாட்டார்கள்.

அணு ஆயுதப் போர் தொடங்கினால் அரசால் போரை முன்னின்று நடத்துவதற்குத்தான் நேரமிருக்கும். முதன்மைத் தலைவர்கள் தப்பியோடவே முனைப்பாக இருப்பர். அவர்களுக்குப் பொதுமக்களைக் காக்கும் வழி தெரியாது. அணு ஆயுதப் போரிலிருந்து இறைப் பிரார்த்தனைகளாலோ அல்லது அமைதிப் பேச்சுவார்த்தைகளாலோ தப்பிவிட முடியாது. தன் கையே தனக்கு உதவி எனப் பொதுமக்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளவேண்டும். எப்படி?

அணு ஆயுதப் போருக்கான முகாந்திரம் தெரியவந்தால் உடனடியாகப் பொதுமக்கள் பின்வரும் 13 வழிமுறைகளை ஒருமனதாக மேற்கொள்ளவேண்டும்.

✷ உங்களுக்கு அசையாச் சொத்துக்கள் இருந்தால் உடனடியாக யார் கேட்டாலும் கேட்ட விலைக்கு விற்றுப் பணமாக்கவும்.

✷ இருக்கும் அசையும் சொத்துக்களை முடிந்தால் விற்கவும் அல்லது அடைக்குப் போட்டுப் பணமாக்கவும்.



✷ வட்டிக்குப் பணம் கொடுத்திருந்தால் உடனடியாக வசூலித்துக்கொள்க. வட்டிக்குப் பணம் வாங்கியிருந்தால் வழக்கம்போல அதனைத் திருப்பிக்கொடுக்க மறந்துவிடுங்கள்.

✷ பங்குச்சந்தையில் பணம் முதலீடு செய்திருந்தால் நஷ்டமானாலும் அனைத்துப் பங்குகளையும் விற்றுப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

✷ வீட்டில் உள்ள, தங்களின் உடலில் உள்ள அனைத்துத் தங்க, வைர நகையையும் விற்று விடவும். வெள்ளிப்பொருட்களையும் விற்கவும்.

• இப்போது தங்கள் கையில் 50,000த்தை மட்டும் வைத்துக்கொண்டு மீதியுள்ள அனைத்து தொகைக்கும் (நிலம், வீடு, அசையும் சொத்துக்கள், நகைகளை விற்ற தொகை, பங்குச் சந்தையில் பெற்றவை போன்ற அனைத்து வகையிலும் வந்த முழுத் தொகைக்கும்) தரமிகுந்த வைரக் கற்களை வாங்கிப் பத்திரமாகக் கையில் வைத்துக் கொள்ளுங்கள். எக்காலத்திலும் எந்தநாட்டிலும் மீண்டும் விற்கக்கூடிய, விலையுயர்ந்த, சுமைகுறைந்த, மறைத்துவைக்க ஏற்ற பொருள் அது மட்டுமே.

✷ ஆளுக்கு மூன்று சோடி துணிமணிகளும் கெட்டுப் போகாத தரமிகுந்த, சத்துநிறைந்த உணவுப் பொருட்களை உங்களால் சுமக்க முடிந்த அளவுக்கு எடுத்துக் கொள்ளுங்கள். நோயாளிகளாக இருந்தால் மருந்து, மாத்திரைகளை அதிக அளவில் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.

✷ முக்கியமான பொருட்கள் அல்லது நினைவுச் சின்னங்கள் எவற்றையும் எடுத்துச் செல்லாதீர்கள். அவற்றை மனத்தில் மட்டுமே சுமந்துகொள்ளுங்கள். உங்களின் சுமை வைரமாகவும் உணவாகவும் மட்டுமே இருக்கட்டும்.

✷ உங்கள் வீட்டாரில் யாரேனும் நெடும் பயணத்திற்கு ஏற்றவராக இல்லை எனில் கல்மனத்தோடு அவர்களை அங்கேயே விட்டுவிடுங்கள். அதற்காக மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்.

✷ உங்கள் வளர்ப்புப் பிராணிகளுக்குப் பிரியாவிடை தந்துவிடுங்கள்.

✷ அணுஆயுதப் போரின்போது பதுங்கு குழிகள் அமைத்துத் தப்பிக்க முடியாது. அணுக்கதிர்வீச்சு சில ஆண்டுகள் வரை வீரியமாகவே இருக்கும். எத்தனை ஆண்டுகளுக்குப் பதுங்கு குழிக்குள் உங்களால் இருக்க முடியும்? ஆதலால், நாட்டை விட்டுச் செல்லுதலே சிறப்பு. (புலம்பெயர்தல் தமிழர்களுக்குப் புதிதல்லவே).

✷ வான்வழியாகவோ அல்லது கடல்வழியாகவோ போரின் சுவடு இல்லாத ஏதாவது ஒரு குட்டி நாட்டுக்கு ஓடிவிடவும். பெரிய நாடுகளுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். காரணம், அங்கும் அணுகுண்டு விழலாம்.

✷ சட்டப்படியோ அல்லது அகதியாகவோ அங்கேயே சில ஆண்டுகள் தங்கிவிடுங்கள். அல்லது அங்கேயே வேர்பதித்துக் கொள்ளுங்கள். மக்கள்தான் நாட்டுக்குச் சொந்தமில்லை. ஆனால், உலகம் அனைத்துயிருக்கும் (மக்களுக்கும்) சொந்தம்தானே!

உலக அரசுகளே! உணவுப் பொருட்களைப் போல ஆயுதங்கள் கெட்டுப்போகும் பொருட்கள் அல்ல. ஆதலால், அவற்றைத் தங்களால் முடிந்த அளவிற்குப் பயன்படுத்தாமலே வைத்திருங்கள்.

நம்காலத்திலும் நமக்குப் பின்னான காலத்திலும் போர், குறிப்பாக அணுஆயுதப்போர் நிகழாமல் இருக்க உலக அரசுக்களை (இறைவனை அல்ல) வேண்டுவோம்.

# மதயானைக் கூட்டம் - தமிழின் முக்கியமான படம்




சிறந்த தமிழ்த் திரைப்படங்கள் எவையுமே தமிழர்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதில்லை என்பது நமது சாபம். அந்த சாபத்தைப் போக்கும் வகையில் அவ்வப்போது சில திரைப்படங்கள் வருவதுண்டு. விருமாண்டி, ஆடுகளம், வம்சம், சுப்ரமணியபுரம், காதல் போன்றவை. அந்த வகையில் இன்னொரு திரைப் படம், அதுவும் வம்சம், விருமாண்டி படங்களின் பலவீனங்கள் இல்லாமல் சிறப்பான ஒரு திரைப்படமாக "மதயானைக் கூட்டம்" உருவாகியிருக்கிறது.

ஒருவனின் இரண்டு மனைவிகளுக்குள்ளான உணர்ச்சிகள், அவர்களின் வாரிசுகளுக்குள்ளே எழும் பிரச்சினைகளை மணிரத்னத்தின் "அக்னி நட்சத்திரம்" நகர்ப்புற மேற்குடியினரின் வாழ்க்கையை மையமாக வைத்துச் சொன்னது என்றால், மதயானைக் கூட்டம் அதே பிரச்சினைகளை கிராமத்தையும் ரத்தமும் சதையுமான மனிதர்களை முன் வைத்துப் பேசுகிறது. அதுவும் அக்னி நட்சத்திரம் செய்யத் தவறிய நுணுக்கங்களோடு.

திரைப்படத்தின் முதல் காட்சியிலிருந்தே கதை தொடங்கிவிடுகிறது. கதையைச் சொல்லத் தொடங்கும் விதமும் அக்கதை மெல்ல நம்மை ஆக்கிரமித்துக் கொள்ளும் விதமும் அழகு. திரையெங்கும் உண்மையான மனிதர்களை உலவவிட்டது போன்ற நடிகர்களின் கச்சிதமான தேர்வு, நடிப்பு. நல்ல பின்னணி இசை (ரகுநந்தன்). காட்சிக்கேற்ற பாடல்கள். மிகத் திறமையான பாடல் வரிகள் (ஏகாதசி). மனதை அள்ளும் ஒளிப்பதிவு. அதிலும் காட்சிகளின் மாறும் தன்மைக்கேற்ப பயன்படுத்தப்பட்டிருக்கும் நிறம் என எல்லாவற்றிலும் மதயானைக் கூட்டம் நம்மைக் கட்டிப் போடுகிறது.

திரைக்கதையை மிகச் செறிவாக மிகக் கச்சிதமாக எழுதியிருக்கிறார்கள். ஒரு எதிர்பாராத சாவும், அதைத் தொடர்ந்து வரும் இரண்டு கொலைகளும் நம்மை பரபரப்பின் உச்சத்துக்கே கொண்டு செல்கின்றன. இந்த சாவுக் காட்சிகள் படம்பிடிக்கப்பட்டிருக்கும் நுணுக்கமான விதம் தனியே சொல்லப்படவேண்டியது. பொதுவாகவே இயக்குநர்கள் நுணுக்கமான காட்சிகளில் அத்தனை கவனம் செலுத்துவதில்லை. கதை நிகழும் இடம், அதோடு தொடர்புடைய மனிதர்கள், அவர்கள் பேச்சு வழக்கு, அவர்களது பாரம்பரியம் என எல்லாவற்றையும் நுணுக்கமாகப் பார்த்துப் பதிவு செய்வது மிக முக்கியமானது. பார்வையாளர்கள் இதன் எல்லா நுணுக்கங்களையும் புரிந்துகொள்ளாமல் போகலாம். ஆனால் இந்த நுணுக்கங்கள் தரும் ஒட்டுமொத்த மனப்பதிவு அபாரமானது. அதையே மதயானைக் கூட்டம் சாதித்திருக்கிறது.

நம்மிடம் கதை இல்லை, எல்லாக் கதைகளும் எடுக்கப்பட்டுவிட்டன என்று சொல்வதெல்லாம் ஹம்பக் என்பதை இப்படம் மீண்டும் நிரூபிக்கிறது. எத்தனையோ கதைகளை நம் மண்ணோடு பொருத்தி மீண்டும் மிக அழகாக எடுக்கலாம் என்பதற்கு மதயானைக் கூட்டம் இன்னொரு உதாரணம். அந்த வகையில் இது முக்கியமான படம்.

ஒரு சில குறைகள் உண்டு. ஆனால் அவற்றையெல்லாம் பொருட்படுத்த வேண்டியதில்லை என்னும் அளவுக்கு திரைப்படம் சிறந்து விளங்குகிறது. இப்படத்தின் தயாரிப்பாளர் இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ். ஆனால் படத்துக்கு இசை ரகுநந்தன். இளம் படைப்பாளிகளின் இந்தப் போக்கு ஆரோக்கியமானது.


இப்படத்தில் எழுத்தாளர் வேல ராமமூர்த்தி நடித்திருக்கிறார். மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார். வீரச் சந்தானம் (அவள் பெயர் தமிழரசி), வ.ஐ.ச. ஜெயபாலன் (ஆடுகளம்) வரிசையில் இப்படத்தில் வேல ராமமூர்த்தி விருதும் பெற்றுவிடுவார்.

பாடலாசிரியர் ஏகாதசி இதற்குமுன் என்ன என்ன பாடல்கள் எழுதியிருக்கிறார் என்று தெரியவில்லை. இப்படத்தில் பாடல்களை மிகச் சிறப்பாக, படத்தின் தன்மையைப் புரிந்துகொண்டு எழுதியிருக்கிறார்.

மிகச் சாதாரணமான கதையை, அதற்குரிய களத்தில், அக்களத்துக்குரிய விவரணைகளோடு வைத்து, நம் படத்தை நாம் திரையில் பார்க்கிறோம் என்கிற பெருமிதத்தைக் கொண்டு வந்திருக்கிறது மதயானைக் கூட்டம். பெரும்பாலும் புதுமுகங்கள் நடித்திருப்பதால், படத்தோடு எளிதில் ஒன்றிவிட முடிகிறது. ஆடுகளத்தில் வசனம் எழுதிய விக்ரம் சுகுமாரன் மிகச் சிறப்பாக இப்படத்தை இயக்கி இருக்கிறார். இயக்குநர் விக்ரம் சுகுமாரனும், தயாரிப்பாளர் ஜி.வி. பிரகாஷும் பாராட்டுக்குரியவர்கள்.

(தமிழ் பேப்பர்)

# நிகழ்வுகளின் பதிவுகள்....








சாவகச்சேரி நகராட்சிமன்றத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பொன்விழாவுக்கான கேக்கை தவிசாளர் வெட்டி ஆரம்பிப்பதையும் நகரசபை எதிர்க்கட்சி தலைவர் சாள்ஸ் உரையாற்றுவதையும், உத்தியோகத்தர் கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (11,48)



வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் மாதாந்த முழுநிலா கலை விழாவும் கலாநிதி தமிழ்மணி அகளங்களின் "கம்பனில் நான்" நூல் வெளியீடும் கடந்த மாதம் வவுனியாவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உதய குமார் உரையாற்றுவதையும் நயினை கிருபானந்தா விருது வழங்கி கௌரவிப் பதையும் காணலாம்.




பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த ஒன்றுகூடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் உத்தியோகத்தர்கள் நிற்பதையும் காணலாம். (130)







பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் இளைஞர்களினால் விசேடமாக வடிவமைக்கப்பட்டிருந்த பெத்தலகேம் மாதிரியான கிறிஸ்மஸ் (பாலன்) குடிலையும் உயரமான நத்தார் மரத்தையும் காணலாம். (48)



பூநகரி வாடியடி நகர்ப்பகுதியில் வடக்கின் வசந்தம் திட்டத்தில் 45 மில்லியன் (4.5கோடி) செல வில் பூநகரி பிரதேச செயலர் பணிமனை துரித கதியில் அமைக்கப் பட்டுவருவதைக் காணலாம். (112)



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக வாழ்வெழுச்சித் திணைக்களத்தின் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் திறப்பு விழாவுக்காக எதிர்பார்த்திருப்பதைக் காணலாம். (130)



வாழ்வெழுச்சி திணைக் களத்தின் கீழ் சமுர்த்தி செயற்பாட்டை மாற்றும் செயற்றிட்ட நிகழ்வு நெல்லியடி சமுர்த்திக் காரியாலயத்தில் கடந்த வெள்ளிக் கிழமை நடை பெற்றது. இதில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் மங்கள விளக்கேற்றுவ தையும், கலந்துகொண்ட உத்தியோகத்தர் களையும் காணலாம். (18)

# தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த தின நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்ததின அறக்கொடை விழா நாளை செவ்வாய்க் கிழமை துர்க்காதேவி தேவஸ்தானத்தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் காலை 8.30 மணிக்கு துர்க்கா தேவி தேவஸ்தான மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம் தம்பதி யினரும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப்பேராசிரியர் செ.கிருஷ்ணராசா வைத்தியநிபுணர் த.பேரானந்த ராஜா யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

இந்நிகழ்விற்கான வரவேற்புரையினை சு.ஏழூர்நாயகம், ஆசியுரைகளினை துர்க்கா தேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ வா.அகி லேஸ்வரக்குருக்கள் மருதனார் மடம் சுந்தர ஆஞ்ச நேயர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ இ.சுந்த ரேஸ்வரக்குருக்கள் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளார்கள்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி யின் பிறந்தநாள் அறக்கொடை வழங்கல் நிகழ்வில் இவ்வாண்டு யாழ். போதனா வைத் தியசாலை இரத்தசுத்திகரிப்புப்பிரிவு தெல்லிப் பளை ஆதார வைத்தியசாலையின் சிறுவர்விடுதி ஆகியவற்றுக்கு அறக்கொடைநிதி வழங்கப் படுவதுடன் சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியத்தின் மூலம் 100 மாணவர்களுக்கான கல்வி நிதியும் வழங்கப்படவுள்ளது.

இவ்வாண்டுக்கான சிவத்தமிழ் விருது வழங்கும் நிகழ்வில் சிவநெறிப்புரவலர் வைத் தியகலாநிதி கந்தையா மாணிக்கம் (உஷன்) பழம்பெரும் ஒளி, ஒலி அமைப்பாளர் நாகலிங்கம் தவமணிநாயம்(மல்லாகம்) மூத்த இசைக்கலைஞர் கலாபூஷணம் சுப்பையா கணபதிப்பிள்ளை (சுழிபுரம்) மூத்த ஊடகவியலாளர் திருமதி அன்ன லட்சுமி இராஜதுரை (வீரகேசரி) இளைப்பாறிய அதிபர் நாகமுத்து நல்லதம்பி (மட்டுவில்) ஆகியோர் சிவத்தமிழ் விருதினைப்பெறவுள் ளனர். நன்றியுரையினை துர்க்காதேவி தேவஸ் தான இணைச்செயலாளர் நா.தவநாதன் வழங்க வுள்ளார். (63)

# பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கல்





(வேலணை)

வேலணை பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் பாடசாலை மாணவர் களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நயினாதீவு அமுதசுரபி மண்டபத்தில் தீவகம் தெற்கு பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா சதீ சன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட சமுர்த்தி ஆணையாளர்.க மகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச சபையின் தவிசாளரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா (போல்),யாழ்.மாவட்ட சமுர் த்தி ஒருங்கிணைப்பாளர்.ஆ.ரகுநாதன் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். மற்றும் வேலணை சமுர்த்தி தலைமையக முகாமையாளர் செல்வி நகுலராணி, சமுர்த்தி உத்தியோகத்தர் கள் கிராம சேவையாளர்கள், அரச உத்தியோ கத்தர்கள் உட்படப் பொது மக்கள் பலரும் பாட சாலை மாணவர்களும் கலந்துகொண்டார்கள்.

இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றது. அத்தோடு வறுமைக்கோட்டின் கீழ் உள்ள இரு குடும்பங்களுக்கு வீடுகட்டுவதற்கான சிறுதொகை உதவிப்பணம் வழங்கப்பட்டதுடன் சமுர்த்தி நிதிசேகரிப்பில் 2013இல் அதிக சேக ரிப்புச் செய்தவர்களுக்கான பரிசில்களும் வழங் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மல்வம் பொதுச் சந்தை திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நிதியில் புனரமைக்கப்பட்ட மல்வம் பொதுச்சந்தை பிர தேசசபையின் தவிசாளர் தி.பிரகாஷினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மேலதிக வருமானத்தில் ஒதுக்கப்பட்ட 7 இலட்சம் ரூபா நிதி செலவில் இச்சந்தை புனரமைக்கப்பட்டது. இச்சந்தையில், மாட்டிறைச்சிக்கடை மீன் மரக்கறி விற்பனைப் பகுதி போன்றவற்றிற்குத் தனித்தனி யாக இடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சந்தை யினை உடுவில் மல்வம் ஞானப்பிரகாசர் சன சமூக நிலையத்தினர் கடந்த இரண்டு வருடங் களாக பிரதேச சபையிடமிருந்து குத்தகைக்குப் பெற்று நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. புனரமைக்கப்பட்ட மல்வம் பொதுச்சந்தை திறப்பு விழா நிகழ்வில் ஞானப்பிரகாசர் சனசமூக நிலைய உறுப்பினர்கள் பிரதேச சபையின் உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்ட னர். (63)

# வேலை வாய்ப்புச் செய்திகள்

நீங்கள் விரும்பியவாறு உங்கள் வாழ்வை மாற்றிக் கொள்ள விமான நிலையம் துறைமுகத்தில் (தனியார்) கிளீனிங், லொன்றி, காப்பென்டர், வெல்டர், எலக்ரீசி யன், பெயின்டர் சாதாரண ஊழியர் ஆண், பெண் தங்குமிடம் உணவு உண்டு தொடர்புக்கு 0774312176.

துறைமுகம்,விமான நிலையம் வேறு நிறுவனங் களுக்கு வெல்டர் சாரதி பாதுகாப்பு அதிகாரி (ஆண், பெண்) சம்பளம் 48,000வரை. தொடர்புக்கு 0726293122, 0754763658, ஒரே நிறுவனத்தில் கொழும்பு, யாழ்ப்பாணம், ஹட்டன், வவுனியா, உள்ளிட்ட இடங்களில் ஜேம், கோடியல் பிஸ்கட், கிளவுஸ், பால்மா, சொக்லேட் என்பவற்றில் உற்பத்தி, பொதியிடல் லேபல் களஞ்சியப் பிரிவுகளுக்கு ஆண், பெண் வயது 17-50 வரை நாடு முழுவதும் ஆட்சேர்ப்பு நடைபெறும் தங்குமிடம் உண்டு தொடர்புக்கு 0776838223.

A/L படித்து விட்டு நிரந்தர வேலையை எதிர்பார்க்கும் பிரிவினருக்கும் உடனடி வேலைவாய்ப்பு கணனி அறிவு விரும்பத்தக்கது. தங்குமிடவசதி வழங்கப்படும் சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். தொடர்புக்கு 011 4378162.

தொழிற்சாலைக்கு ஆண்கள் தேவை. தங்கியிருந்து வேலை செய்வதற்கு வயது 18 முதல் 25 வரை உணவு தரப்படும் சம்பளம் 18ஆயிரம் தொடர்புக்கு 0112526087.

supermarket ஒன்றுக்கு பெண் காசாளர்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப் படும் தொடர்புக்கு 0777123021.

வெள்ளவத்தையில் இயங்கும் பிரபல கல்வி நிறு வனத்துக்கு துண்டுப் பிரசுரம் விநியோகிக்கக் கூடிய வர்கள் தேவை. தொடர்புக்கு 0770581591

பற்சிகிச்சை நிலையத்துக்கு தாதிமார் தேவை. தொடர் புக்கு 0710478834, 0714039818.

நிரந்தர தொழில், நிரந்தரமான சம்பளம் வருகின்ற தினமே சேர்த்துக் கொள்ளப்படும் (உற்பத்தி, பொதியிடல் மேற்பார்வையாளர்) உணவு தங்குமிட வசதி பயிற்சி வசதியும் உண்டு வயது 18-58வரை ஆண், பெண்களும் குழுக்களாக சேர்த்துக் கொள்ளப்படுவர்.தொடர்புக்கு 0777920278.

புதிய ஆண்டில் நிரந்தர தொழில் உங்களுக்கு நாடு பூராகவும் அமைந்துள்ள தொழிற்சாலை வலையமைப்பில் பிஸ்கட், பொதியிடல், லேபல், உற்பத்தி பிரிவுகளுக்கு முன்னேற்றமடைய விரும்பமுள்ள ஆண்,பெண் தேவை. தொடர்புக்கு 0767325425, 0710724797.

O/L பின் தொழிலுக்கு உணவு, தங்குமிடம் இலவசம் சம்பளம் 39ஆயிரம் வரை லேபல் பொதியிடல் உற்பத்தி நாடு எங்கிலும் சமூகமளித்தவுடன் தொழில் 0758265788, 0712250047.

நீங்கள் இன்னும் வேலையற்றவரா? O/L,A/L பரீட்சை எழுதியவரா? முகாமைப்பிரிவில் supervisor, Assistant Manger Manager போன்ற பதவிகளுக்கு ஆட்கள் தேவை. 6மாத பயிற்சியுடன் சம்பளம் 35ஆயிரத்துக்கு மேல் வரு மானம் பெறக் கூடிய தொழிலுக்காக எம்முடன் இணை யுங்கள் தங்குமிடம் இலவசம் 0770223690, 0777840660, 0713863168.

பெண்கள்,சிறுவர்கள் மற்றும் ஆண்களுக்கான தைத்து முடிக்கப்பட்ட ஆடைகள் பெருந்தொகையாக விநி யோகிக்கக்கூடிய விநியோகஸ்தர்தேவை. தொடர்புக்கு 0773291891.

இலங்கை காப்புறுதி நிறுவனத்தில் கொழும்பு, யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு O/L Maths உடன் 6 பாடம் உள்ளவர்கள் 18வயதுக்கு மேல் விண்ணப்பிக்கலாம். 0773109585.

சிறிய கோழிப் பண்ணைக்கு வேலையாள் ஒருவர் தேவை. தொடர்புக்கு 0777 803664, 072 7803664.

# சாதனை மாணவர்களின் உள்ளத்திலிருந்து.....

## தர்மிகா ரவீந்திரனாதன்

வடமராட்சி மகளிர் கல்லூரி

கணிதப் பிரிவு -3A

மாவட்ட நிலை : 44

தேசிய நிலை: 777



தினமும் கற்க வேண்டும் கற்பவற்றை அன்றே கற்கவேண்டும் அப்படியானால் இலகுவில் வெற்றி பெறலாம்.

எனது தந்தையார் விவசாயி ஆவார். நான் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 133 புள்ளிகளையும் க.பொ.த சாதாரண தரத்தில் 8ஏ.எஸ் பெறுபேற்றைப் பெற்றுள்ளதோடு பாடசாலையில் விஞ்ஞான வினாடிவினாப் போட்டி, ஆங்கிலதினப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளேன்.

விடாமுயற்சியுடன் தினமும் கற்கவேண்டும் கற்பவற்றை அன்றே கற்றால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

## ரம்மியா ரட்ணராஜா

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

உயிரியற் பிரிவு -3A

மாவட்ட நிலை :12

தேசிய நிலை : 88



கற்றலில் ஏற்படும் சந்தேகங்களை சேர்த்து வைக்காது உடனுக்குடன் தீர்த்தால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

நான் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளையும் க.பொ.த சா/தரப் பரீட்சையில் 7ஏ பி சி பெறுபேறுகளையும் பெற்றேன். அத்தோடு பாடசாலைக்காலங்களில் கணித, விஞ்ஞானப் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள் மற்றும் சமூக விஞ்ஞானப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளேன்.

எனது தந்தை அதிபராகவும் தாய் ஆசிரியராகவும் பணியாற்றுகின் றார்கள். மேலும் எனது இப் பெறுபேற்றிற்கு பெற்றோரின் ஒத்துழைப்பும் ஆசிரியர்களின் அரவணைப்புமே காரணமாகும்.

## சுலோசினி சிவராமன்

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

கணிதப்பிரிவு - 3A

மாவட்ட நிலை : 27

தேசிய நிலை : 459



படிப்பதை அன்றே படிக்க வேண்டும். விடாமுயற்சியுடன் கற்றால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

அந்தவகையில் நான் இந்தப் பெறுபேற்றைப் பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

நான் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 139 புள்ளிகளையும் க.பொ.த சாதாரணதரத்தில் 9 ஏ பெறுபேற்றையும் பெற்றேன் எனது தந்தை விவசாயி சகோதரன் யாழ்.பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கின்றார்.

## ரூபி அனுஷா பாக்கியராஜா

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

கணிதப் பிரிவு -3A

மாவட்ட நிலை :19

தேசிய நிலை : 217



படிப்பவற்றை ஒழுங்காகப் படிப்பதன் மூலமும் கடந்தகால பரீட்சை வினாத்தாள்களை செய்வதன் மூலமும் கிடைத்த பயிற்சியினால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

நான் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 149 புள்ளிகளையும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 7ஏ 2சி பெறுபேற்றையும் பெற்றேன்.

எனது தந்தை ஆசிரியராவார் கடின முயற்சி இருந்தால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

தொகுப்பு : கணா நாதன்

**க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள் தமது சாதனை பகிர்வை தினமுரசில் வெளியிடவிரும்பினால் 0777193264, என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.**

# பாடசாலை அனுமதியில் முறைகேடு

# தெற்கில் விசாரணை ஆரம்பம்

தரம் ஒன்றுக்கு பிள்ளைகளை சேர்ப்பதில் இடம்பெற்றுள்ள முறைக்கேடுகள் தொடர்பில் மேல் மாகாண கல்வித் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பாடசாலைகளுக்கு பிள்ளைகளைச் சேர்க்கும்போது பின்பற்றப்படும் புள்ளி வழங்கும் முறைமை குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக திணைகளம் குறிப்பிட்டுள்ளது.

தரம் ஒன்றுக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ள பிள்ளைகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் ஏற்கனவே நிறைவு பெற்றுள்ளன.

இம்மாதம் 16 ஆம் திகதி பாடசாலைகளுக்கு புதிதாக பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு பிள்ளைகளை சேர்க்கும்போது அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களை மாத்திரம் வழங்குமாறு மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க பெற்றோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தக் கட்டணங்களை தவிர அதிபருக்கோ அல்லது பாடசாலை அபிவிருத்திச் சபைக்கோ நிதியை வழங்க வேண்டாம் என முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுவரை தமது பிள்ளைக்கான பாடசாலை கிடைக்காத பெற்றோர் உடனடியாக வலயக் கல்விப் பணிப்பாளரை சந்திக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

தரம் ஒன்றுக்கு பிள்ளைகளை சேர்ப்பதற்காக பணம் கோரப்பட்டமை தொடர்பில் மேல் மாகாண கல்விச் செயலாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பிலும் றம்புட்டான் பரீட்சார்த்த முயற்சி வெற்றி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பரீட்சார்த்த முறையில் மேற்கொள்ளப்பட்ட றம்புட்டான் செய்கை வெற்றியளித்துள்ளது.

இதனால் அங்குள்ள விவசாயிகள் றம்புட்டான் செய்கை மீது கூடிய ஆர்வம் காட்டுகின்றனர்.

மட்டக்களப்பு படுவான்கரை பிரதேசத்தின் பேஹரத்தீவுப்பற்று பிரதேசசெயலகப் பிரிவின் திக்கோடை கிராமத்திலேயே இவ்வாறு பரீட்சார்த்த முறையில் றம்புட்டான் செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈச்சம் பழச் செய்கையும் வெற்றியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மருத்துவ மனைகளில் முறைகேடு தடுத்து நிறுத்த நடவடிக்கை

சுகாதார அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளில் முறைகேடுகள் இடம்பெறுவதை தடுத்து நிறுத்துவதற்கு விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள அரச வைத்தியசாலைகளில் திடீர் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

மாதத்திற்கு 3 சுற்றிவளைப்புக்களையேனும் மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் மக்களுக்குத் தரமான சேவை கிடைக்கின்றதா என்பதைக் கண்டறிவதே இதன் நோக்கம் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் விசேட சுற்றிவளைப்புப் பிரிவின் அதிகாரிகளை இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் உள்ள வாகனங்களின் பயண விபரம் பதிவு செய்யப்படுகின்றமை குறித்து விசேட கவனம் செலுத்துமாறும் சுகாதார அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

## ரயிலுடன் மோதி இளைஞர் மரணம்

கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கி பயணித்த ரயிலில் இந்நபர் நேற்று முன்தினம் பிற்பகல் மோதுண்டுள்ளார்.

இந்நிலையில் படுகாயமடைந்த நபர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மரணமடைந்துள்ளார்.

நிட்டம்புவ பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதான நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவரது சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

அதேவேளை பிரேத பரிசோதனைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



## பரமர் சங்கமம்

தன்முதுகு ஒருபோதும் தனக்குத் தெரிவதில்லையல்லவா? இதுபோல மற்றவர்களின் முதுகுபாக்கச் சொல்லேக்கை எல்லோரும் சரியாகச் சொல்வதில்லை. குறைச்சுக் கூட்டிச் சொல்வதையும் இந்த நாடு கண்டுள்ளது.

ஏன் அப்படிச் சொல்லுறாங்கள் எண்டால் மனதில் நல்லெண்ணம் இல்லாமல் இல்லாட்டிப் பொறாமையில் அழுக்கறை விதைக்க வேணுமெண்ட நோக்கில்தான் தானை. சாதாரணமாக விளையாட்டுக்கு சிறுவர் மத்தியில் இது நடந்தாலும் விட்டுவிடலாம். சிறுபிள்ளை வேளாமை வீடு வந்து சேராது" தானை

நாட்டை ஆளமக்களால் தெரிவு செய்து அனுப்பும் நாடாளுமன்ற உறுப்பினரோ, மந்திரிமாரோ அப்புடி இப்பிடி வாயில வந்த பேச்செல்லாத்தையும் பொறுப்பில்லாமல் பேசி விடலாமா? வேறெந்த நாட்டிலும் நடக்காதோ இல்லை வேறு எங்கட நாட்டுப் நாடாளுமன்றத்தில் இந்த மாதிரியான பேச்சுக்கள் இடம்பெற்றுவருவது அபரிமிதம்.

அவை கசற்றில் பதியப்படாமல் நீக்கி விடுவதும் உண்டு. வரலாற்றுத் தகவல்களாகப் பதியப்பட்டு விடுவதும் உண்டு. கடந்த 17 ஆம் திகதி நாடாளுமன்றக் குழு நிலை விவாததத்தில் பேசுகையில் அமைச்சர் மேர்வின் சில்வா. இராவணன் ஒரு சிங்கள வீரன் என்று குறிப்பிட்டிருந்தார்.

அதுவுமில்லாமல் மகாவிஷ்ணு உப்பலவின்ன என்னும் சிங்களக் கிராமத்தில் பிறந்தவரென்றும் கதிர்காமக் கந்தன் கதிர்காமத்தில் தான் பிறந்தாரென்றும் கூறி புதிய சரித்திரத்தை படைத்துள்ளார். மேர்வின் சில்வா என்றால் நாடக பவூன் பாத்திரம் போன்றவரென ஒதுக்கிவிட முடியுமா?

மற்றொரு வேடிக்கை என்னவெண்டால் "இராவணன் என்ற மன்னன் இலங்கையில்இருக்கவில்லை. எண்டு எல்லாவல மேத்தானந்த தேரர் சொல்லி இருப்பதுதான ஒருவர் இராவணனை தமிழன் இல்லை சிங்கள வீரன் என்கிறார். மற்றவர் இராவணன் என்னும் மன்னன் இலங்கையில் இருக்கவில்லை அதெல்லாம் வெறும் புராண,இதிகாச கற்பனைவாதக் கட்டுக்கதைகள் என்கிறார்.

இலங்கைக் காற்று இப்போ எதிரும் புதிருமாக வீசத் தொடங்கி விட்டதெண்டுதான் கருதவேண்டியுள்ளது. அதுவும் இலங்கேஸ்வரன் என இதிகாசம் கூறப்படும் இராவணேஸ்வரன் விடயத்தில் இப்படியெல்லாம் சொல்லிக் கில்லி தமிழனுக்கு இலங்கையில் உரித்தே இல்லையெனத்தான் எல்லாச் சிங்களத் தலைவர்களும் முயலுகினம்.

இரண்டு கோடியைத் தாண்டிவிட்ட நாட்டின் சனத்தொகையில் எட்டரைக் கோடி சிங்களவர்களாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் அரைக்கோடிச் சனம் தமிழர், மலேயர், முஸ்லிம, பேக்கர்களில் இருந்து சிங்களவர்களாக மாறிய. மாற்றப்பட்டவர்களென்பதும் வரலாற்றுண்மை

கல்தோன்றி மண்தோன்றாக் காலம்தோன்றிய தமிழினமே இவர்களுக்கெல்லாம் மூதாதையர் எண்ட உண்மை அவரவர் முதுகுகளைப் போல அவர்களுக்குத் தெரிவதில்லை.என்ன நான் சொல்லுறே...

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (O/L) Examination model Paper

**விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்**

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) மின்குமிழில் நிரப்பப்படும் வாயு எது?
1) $H_2$ 2) Ar 3) $O_2$ 4) $CO_2$

2) இரசாயன சக்தி ஒளிச்சக்தியாக மாறும் சந்தர்ப்பத்தைத் தருவது?
1) சூரியக்கலங்கள் தொழிற்படுதல் 2) டைனமோக்கள் இயங்கல்
3) மின்சூள் ஒளிரல் 4) மின்மோட்டார் இயங்கல்

3) குருதியில் வெண்குருதிச் சிறுதுணிக்கைகள் அசாதாரணமாக அதிகரிப்பதால் ஏற்படும் விளைவு?
1) குருதிச்சோகை 2) ஈமோபீலியா
3) உயர் குருதியமுக்கம் 4) லியூக்கேமியா

4) உணவுக் கால்வாய்ப்பகுதியில் அகத்துறிஞ்சப்படும் குருதியை எடுத்துச் செல்லும் குருதிக்கலன் எது?
1) ஈரல் நாளம் 2) ஈரல் நாடி
3) ஈரல்வாயி நாளம் 4) பிற்பெருநாளம்

5) ஒளித்தொகுப்பின் பிரதான விளைபொருளாக அமைவது
1) குளுக்கோசு 2) மாப்பொருள்
3) ஒட்சிசன் 4) சக்தி

6) இலைகளில் மாப்பொருள் பரிசோதனையின்போது அற்ககோலில் வெப்பமாக்கப்படுவதற்கான காரணம்
1) கலங்களை இறக்கச்செய்ய 2) பச்சையத்தை அகற்ற
3) அற்ககோலை அகற்ற 4) மாப்பொருளை இனங்கான


7) வன்கூட்டுத்தசை பற்றிய கூற்றுக்களில் தவறானது
1) கிளைகளைக் கொண்டவை
2) வரிகள் கொண்டவை
3) ஒரு கலத்தில் பல கருக்கள் காணப்படும்
4) இச்சை வழி இயங்கும்.

8) சாற்றேற்றம் என்பதால் குறிப்பிடப்படுவது
1) இலைகளிலிருந்து குளுக்கோசு காழின்மூலம் ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படல்.
2) இலைகளிலிருந்து குளுக்கோசு உரியத்தின் மூலம் ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படல்.
3) வேரிலிருந்து நீரும் கனியுப்புக்களும் காழினூடாக மேல்நோக்கிக் கடத்தப்படல்.
4) வேரிலிருந்து நீரும், கனியுப்புக்களும் காழினூடாக மேல்நோக்கிக் கடத்தப்படல்.

9) ஆவியுயிர்ப்பு வீதத்தைக் குறைக்கும் சந்தர்ப்பம் எது?
1) சூரிய ஒளி அதிகரித்தல் 2) காற்றின் வேகம் கூடுதல்
3) வளியின் ஈரப்பதன் கூடுதல் 4) வளியமுக்கம் குறைதல்

10) 10 kg திணிவுள்ள கல்லொன்றை பாதையில் கண்ட மாணவன் 5 N விசையை பிரயோகித்து 2 m நகர்த்தி பாதையோரத்தில் விட்டான். மாணவனால் செய்யப்பட்ட வேலை
1) 10 x 2 J 2) 5 X 2 J
3) 10 x 5 J 4) (10 + 5) 2 J

11) கீழே தரப்பட்ட படங்களில் மின்குமிழ் எதில் ஒளிரும்.





12) செவிப்பறையால் பெறப்பட்ட அதிர்வுகளை வரியலாக்கி உட்செவிக்குக் கடத்துவது
1) ஊத்தேக்கியாவின் குழாய் 2) செவிச்சிற்றென்புகள்
3) நத்தைச்சுருள் 4) தலைவாயில் உபகரணம்


13) இதயத்துடிப்பை ஆளும் மையநரம்புத் தொகுதியின் பகுதி எது?
1) மூளையம் 2) மூளி
3) நீர்வளைய மையவிழையம் 4) முண்ணான்

14) ஈர்க்கப்பட்ட இழையொன்றின் மீடிறனை அதிகரிக்க பின்வருவன வற்றில் எதனை மேற்கொள்வீர்?
1) இழையின் நீளத்தைக் கூட்டல்
2) இழையின் இழுவிசையைக் கூட்டல்
3) இழையின் தடிப்பைக் கூட்டல்
4) இழையின் எண்ணிக்கையைக் கூட்டல்

15) வளியில் ஒலியின் வேகம் 330 $ms^{-1}$ எனின், 20 cm நீளமுடைய அலையின் மீடிறன் யாது?
1) $\frac{330}{20}$ Hz 2) $\frac{20}{330}$ Hz
3) $\frac{330 \times 100}{20}$ Hz 4) $\frac{330}{20 \times 100}$ Hz

16)




சுற்றில் ஒரு மின்கலம் 1.5 V ஆகவும் A மானி வாசிப்பு 0.5 A ஆகவும் காணப்பட்டது. மின்குமிழின் தடை யாது?
1) $\frac{1.5}{0.5}$ Ω 2) $\frac{0.5}{1.5}$ Ω 3) $\frac{3}{0.5}$ Ω 4) $\frac{0.5}{3}$ Ω

17)



ஓமின் விதியை வாய்ப்புப் பார்க்க மாணவன் ஒருவனால் ஒழுங்கமைக்கப்பட்ட மின்சுற்றைப் படம் காட்டுகிறது. இங்கு X,Y,Z என் பவற்றை முறையே குறிப்பவை.
1) மின்குமிழ், அம்பியர்மானி, வோல்ற்மானி
2) வோல்ற்மானி, மின்குமிழ், அம்பியர்மானி
3) அம்பியர்மானி, வோல்ற்மானி, மின்குமிழ்
4) அம்பியர்மானி, மின்குமிழ், வோல்ற்மானி

18) கம்பியொன்றின் தடை தொடர்பான கூற்றுக்களில் சரியானது எது?
1) கம்பியின் நீளம் கூட, தடை கூடும்
2) கம்பியின் கு.வெ. கூட, தடை கூடும்.
3) கம்பியின் வெப்பநிலை கூட, தடை குறையும்.
4) கம்பி ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் தன்மைக்கு ஏற்ப தடை மாறாது.

19) மின்சுருள் ஒன்றினூடாக 5 A மின்னோட்டம் 2 நிமிடங்களுக்கு பாய்ந்தபோது 7200 J வெப்பம் விடுவிக்கப்பட்டது. சுருளுக்கு வழங்கப்பட்ட மின்னழுத்த வித்தியாசம் யாது?
1) $\frac{7200}{5 \times 2}$ V 2) $\frac{7200}{5 \times 2 \times 60}$ V
3) $\frac{7200 \times 60}{5 \times 2}$ V 4) $\frac{5 \times 2 \times 60}{7200}$ V


20)



$CuSO_4$ கரைசல்

X,Y காபன் கோல்கள் தரப்பட்ட அமைப்பை அவதானித்த மாணவர் கூறிய அவதானங்கள் பின்வருமாறு
A - Y இல் செங்கபிலப் படிவு ஏற்பட்டது.
B - கரைசலின் நீலநிறம் படிப்படியாக குறைந்தது.
C - X இல் வாயுக் குமிழிகள் தோன்றின
இவற்றுள் சரியானது எது?
1) A,B 2) A,C 3) B,C 4) A,B,C

21) கபச்சுரப்பியால் சுரக்கப்படும் ADH இனால் ஆளப்படும் செயற்பாடு
1) உடல் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தல்
2) உடலில் நீர்ச்சமநிலையைப் பேணல்
3) ஆபத்தான சந்தர்ப்பங்களில் உடற் செயற்பாடுகளுக்கு காரணமாக அமைதல்
4) குருதியின் வெல்ல மட்டத்தைப் பேணல்.

22) கீழே படத்தில் காட்டப்பட்டவாறு அமைப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டு சூரிய ஒளியில் வைக்கப்பட்டன. முதலில் கூடிய வாசிப்பைக் காட்டும் வெப்பமானியைக் கொண்ட அமைப்பு எது?




23)



தரப்பட்ட அமைப்புத் தொடர்பான கூற்றுக்களில் சரியானது எது?

1) காந்தவிசைக்கோடு N→S, மின்னோட்டம் X→Y, இயக்கம் கீழ்நோக்கி
2) காந்தவிசைக்கோடு N→S, மின்னோட்டம் X→Y, இயக்கம் கீழ்நோக்கி
3) காந்தவிசைக்கோடு S→N, மின்னோட்டம் Y→X, இயக்கம் கீழ்நோக்கி
4) காந்தவிசைக்கோடு S→N, மின்னோட்டம் Y→X, இயக்கம் கீழ்நோக்கி

24) போசலின் பாண்டம் தயாரிப்பில் பயன்படுவது,
1) தொலமைற்று, பெல்ஸ்பார் 2) படிகம், தொலமைற்று
3) சிலிக்கா, மைக்கா 4) படிகம், பந்துக்களி

25) ஒருவரது கண்ணைச் சோதித்துப் பார்த்த கண் வைத்தியரால் வழங்கப்பட்ட மருந்துவச் சிட்டையில் காணப்பட்டது பின்வருமாறு,

| R | L |
|---|---|
| +2.5 | +2.5 |

இக் குறிப்புப்ப்டி அவர் அணியவேண்டிய வில்லைவகையும் அதன் குவியத்தூரமும் முறையே,
1) குவிவுவில்லை 40 cm குவியத்தூரம்
2) குழிவுவில்லை 50 cm குவியத்தூரம்
3) குவிவுவில்லை 2.5 m குவியத்தூரம்
4) குழிவுவில்லை 2.5 m குவியத்தூரம்

26) எப்போதும் உருச்சிறுத்த நிமிர்ந்த விம்பத்தை தருபவை தொடர்பான A,B,C, D ஆகிய நான்கு மாணவரின் கூற்று.
A- குவிவுவில்லை B - குவிவு ஆடி
C - குழிவு வில்லை D - குழிவு ஆடி
மேற்படி 4 மாணவரின் கூற்றுக்களில் சரியானது.
1) A யும் D யும் 2) C யும் D யும்
3) C யும் B யும் 4) A யும் B யும்

27) இரும்பின் தாதுப்பொருட்களை பயன்படுத்தி இரும்பு பிரித்தெடுத்தல் தொடர்பான 4 மாணவரின் கூற்றுக்கள் பின்வருமாறு
மாணவன் A - இங்கு தாழ்த்தல் செயல்முறை பயன்படுகிறது. தாழ்த்தும் கருவியாக கற்கரி பயன்படும்.
மாணவன் B - இங்கு தாழ்த்தல் செயல்முறை பயன்படும். தாழ்த்தும் கருவியாக காபனீரொட்சைட்டு பயன்படுகிறது.
மாணவன் C - இங்கு தாழ்த்தல் செயல்முறை பயன்படும். தாழ்த்தும் கருவியாக சுண்ணக்கல் பயன்படுகிறது.
மாணவன் D - இங்கு தாழ்த்தல் செயன்முறை பயன்படும் தாழ்த்தும் கருவியாக காபனீரொட்சைட்டு பயன்படுகிறது.
மேற்படி மாணவரின் கூற்றுக்கள் தொடர்பாக சரியானது
1) A யின் கூற்று 2) B யின் கூற்று
3) C யின் கூற்று 4) D யின் கூற்று

28) பின்வருவனவற்றுள் பெற்றோலிய விளைபொருளில் இருந்து உற்பத்தி செய்யப்படாதது.
1) ரெஜிபோம் 2) நைலோன்
3) குளோரோபோம் 4) ரெறிலீன்

29) $Pb(NO_3)_2$ எனும் சேர்வையிலுள்ள நைதரசனின் சதவீதம்

Pb = 207, O =16, N - 14


1) $\frac{28}{331} X 100$ 2) $\frac{28}{100} X 331$

3) $\frac{28}{251} X 100$ 4) $\frac{251 X 28}{100}$

30) ஈருலோகச் சட்டத்தை கொண்டிராதது,
1) மின்கனலி 2) சோறு அவிப்பான்
3) மின் அழுத்தி 4) அமிழ்ப்பு வெப்பமாக்கி

31) தன்மகரந்த சேர்க்கையைத் தடுப்பதற்கான இசைவாக்கங்களும் அதனைக் கொண்டுள்ள தாவரங்களும் பின்வருமாறு, இவற்றுள் பொருத்தமானது.
1) நாகலிங்கப்பூ - பூசணி
2) சமனில் தம்ப உண்மை - மல்லிகை
3) ஆணகமுள் முதிர்வு - இந்திரபுஷ்பம்
4) ஈரில்லம் - பப்பாசி

32) ஒளிகாலும் இருவாயில்கள் இரண்டு கொண்டு 4 மாணவர் ஏற்படுத்திய மின்சுற்றுக்கள் பின்வருமாறு, இவற்றுள் எதில் ஒளிர்வு அவதானிக்கப்படும்




33) வானொலி, தொலைக்காட்சி என்பன தொடர்பாடல் ஊடகங்கள் ஆகும். இங்கு பயன்படும் மின்காந்த அலைகளின் மீடிறன் வீச்சு
1) $10^{11}$ - $10^{14}$ Hz 2) $10^{5}$ - $10^{15}$ Hz
3) $10^{3}$ - $10^{5}$ Hz 4) $10^{5}$ - $10^{10}$ Hz

34) மின்வழங்கலுக்காக பயன்படும் உலோகம் கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டிய இயல்பு
1) வளியில் அரிப்புக்கு உட்படாது இருத்தல்
2) கடத்தாறு குறைவாக இருத்தல்.
3) தடைத்திறன் கூடவாக இருத்தல்.
4) இலேசானதாக இருத்தல்.

35) கொள்ளளவி ஒன்றில் பயன்படும் மின்னிழையப் பதார்த்தம் அல்லாதது.
1) ஈயத்தாள் 2) கடதாசி தாள்
3) பொலித்தீன் தாள் 4) வளி

36) பின்வரும் எவ் நுண்ணங்கியின் தொழிற்பாடு காரணமாக மண்ணில் நைத்திரேற்று உப்புக்களின் செறிவு குறைக்கப்படுகிறது.
1) நைதரசன் பதிக்கும் பற்றீரியாக்கள் மூலம்.
2) நைத்திரைற்று ஆக்கும் பற்றீரியாக்கள் மூலம்.
3) நைதரசன் இறக்கும் பற்றீரியாக்கள் மூலம்.
4) நைத்திரேற்று ஆக்கும் பற்றீரியாக்கள் மூலம்.


37) P, Q, R,S ஆகிய 4 மூலகங்கள் கொண்டு நடாத்தப்பட்ட செயற்பாடுகளின் பெறுபேறுகள் பின்வருமாறு

| உலோகம் | குளிர் நீருடன் தாக்கம் | ஐதான அமிலத்துடன் | நீராவியுடன் தாக்கம் |
|---|---|---|---|
| P | தாக்கமில்லை | தாக்கம் நிகழ்கிறது | தாக்கமில்லை |
| Q | தாக்கம் நிகழ்கிறது | தாக்கம் நிகழ்கிறது | தாக்கம் நிகழ்கிறது |
| R | தாக்கமில்லை | தாக்கமில்லை | தாக்கமில்லை |
| S | தாக்கமில்லை | தாக்கம் நிகழ்கிறது | தாக்கம் நிகழ்கிறது |

தரப்பட்டனகொண்டு தாக்குதிறன் ஏறுவரிசையில் குறித்த மூலகங்களை ஒழுங்குபடுத்தின் பெறப்படும் தொடர்
1) P, Q, R, S 2) R, P, S, Q
3) Q, S, P, R 4) P, S, R, Q

38) மேலே வினா 37 இன் மூலம் Q அமிலத்துடன் அடையும் தாக்கத்தி தாக்கவீதத்தை அதிகரிக்க மேற்கொள்ள முடியாதது.
1) அமிலத்தின் செறிவைக் கூட்டல்
2) தாக்கு கலவையினை வெப்பமேற்றல்
3) தாக்கத்தில் பயன்படும் மூலகம் Q வை தூளாக்கி தாக்கமுறவ்டல்
4) தாக்கத்தை குளிரூட்டியில் வைத்த' நடாத்துதல்.

39)




AB எனும் பலகைத்துண்டை சாய்தள மாகப் பயன்படுத்தி 120 N சுமையினை B வரை எடுத்துச் செல்வதை படம் காட் கிறது. இங்கு பொ... வேக விகி அமைவது.


1) $\frac{120}{30}$ 2) $\frac{30}{120}$

3) $\frac{0.4}{2}$ 4) $\frac{2}{0.4}$

40) "கல்லூரிகளில் சுற்றுச்சூழல் படையணியை உருவாக்கி நலன் பேணு வீராக" இது பாடசாலை வாசலில் காணப்பட்ட வாசகம் ஆகும். இது தொடர்பாக சரியான கூற்று.
1) கல்லூரிகள் தோறும் சுற்றுப்புற சூழல் படையணி அமைப்பில் மாணவன் நலன் பேணப்படும்.
2) பாடசாலைகளில் சுற்றுப்புறச் சூழல் படையணி அமைக்கவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
3) மாணவர்கள் குழுக்களாக தொழிற்பட்டு சூழலை பேணின் மாணவரின் உள உடல் நலன் பேணப்படும்.
4) சுற்றுச்சூழலைப்பேண மாணவர் படையணி அமைப்பது அத்தியாவசியமாகும்.

## பகுதி II

01) மின்சூழ் விளக்கு ஒன்றின் அமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது. இதில் மின்கலங்களோ, மின் குமிழ்களோ பயன்படுத்தப்படவில்லை. மின்சூளை கிடையாகப் பிடித்துக்கொண்டு மெதுவாக 15 - 30 Sec இற்கு முன் பின்னாக அசைத்தால் 5 நிமிடம் மின்சூழிலுள்ள LED தொடர்ந்து ஒளிர்வதற்குத் தேவையான மின்சக்தி உருவாக்கப்படுகின்றது.




1) a) இங்கு மின்சக்தி உருவாக்கப்படுவதற்கு அடிப்படையான விதி எது?
b) அவ்விதியை எழுதுக.
2) LED மின்சக்தியை எவ்வாறு பெறுகின்றதென விளக்குக.
3) a) X எனப்படும் அமைப்பு யாது?
b) அமைப்பு X பயன்படும் சந்தர்ப்பம் யாது?
4) a) LED யின் குறியீட்டை வரைக.
b) LED யின் தொழிற்பாட்டை விபரிக்க.
5) இம்மின்சூழின் தொழிற்பாட்டின் தத்துவத்தின் அடிப்படையில் தொழிற்படும் அமைப்பு யாது?

# இரணைமடு என்றும் குறையாத அட்சய பாத்திரமா?

யாழ்.மாவட்ட நன்னீர் ஊற்றுக்கள் சவராக மாறிவருவதைத் தடுப்பதற்கான தற்பாதுகாப்பு ஆரம்ப நடவடிக்கையாக பருவகாலங்களில் பெய்யும் மழை நீரை கடலோடு தடுப்பற்கான நடவடிக்கைகளை சட்ட ரீதியாகவும் அறிவுறுத்தல் ரீதியாகவும் விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டிய அவசியமும் தேவையும் ஏற்பட்டுள்ளது.

முதலாவதாக பருவகாலங்களில் பெய்யும்மழை நீரை ஒவ்வொரு (வளவும்) வீட்டுக்காரரும் வெளியே விடாது விட்டினுள்ளேயே நீரை சேமிப்பதாகும். அதாவது ஒவ்வொருவரினுடைய வசதிக்கேற்ப 8x8 அல்லது 8x6 அல்லது 6x6 அளவு கொண்ட குழி ஒன்றை வெட்டி மலசலக்குழி போல் கட்டி மூடிவிட்டு அக்குழியினுள் வீட்டினுள் உள்ள நீரை ஒரு துளியும் வெளியே செல்லவிடாது அக்குழியினுள் சேமிப்பதாகும். இதன் போது நுளம்பு மற்றும் கிருமிகள் பரவாது குழி அமைக்க வேண்டும்.

இதை பிரதேச சபை, நகரசபை, மாநாகரசபை போன்றன வீட்டு அனுமதி வழங்கும் போது இக்குழியின் அவசியத்தையும் கருத்தில் கொண்டு குழியும் அமைத்தாற்தான் கட்டட அனுமதி வழங்க வேண்டும். இது இந்திய தமிழ்நாட்டு அரசின் முதல்வர் கட்டாயமாக அமுல்படுத்தி அதன் மூலம் சவர்நீர் நாளடைவில் நன்னீராக மாறியுள்ளது.

மேலும் வாய்க்கால்கள் மூலம் கடலை சென்றடையும் நீரை தடுத்து நிறுத்துதல் வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் அதிகளவா நீர் பருவகாலங்களில் கடலுடன் சென்று கலக்கின்றது. இதனைத் தடுக்க பிரதேச, மாகாண அரசு என்பன நடவடிக்கை எடுக்க வேண்டும். கடல் நீருடன் கலக்கும் இடத்தில் அணைகளை அமைத்து நரை கடலுடன் கலக்காமல் சேமிக்க வேண்டும். இப்படி சேமிப்பதன் மூலம் அந்நீரானது நிலத்தில் ஊறி ஊறி நாளடைவில் ஊற்றுடன் கலந்து சவர்நீர் நன்னீராகும் வீதம் அதிகரிக்கும்.


ஆகவே ஒரு துளி நீரும் கடலுடன் கலபபதை உடன் தடுத்து நிறுத்த வேண்டும். இதன் மூலம் யாழ்ப்பாணத்தின் நன்னீர் சவர்நீராவதைத் தடுக்க அதிக வாய்ப்புள்ளது. குளங்கள், கால்வாய்கள், கேணிகளுடன் புனரமைக்கப்பட வேண்டும். ஊர் மக்களின் ஆதரவையும் சேவையையும் தொண்டு முறையில் பெற்று அவர்களுக்கான ஆதரவினை வழங்கி சீர் செய்ய வேண்டும்.

சில பிரதேச சபைகள் குளங்களை கேணிகளை குப்பை போட்டு நிரப்புவது அவர்களது அறியாமையை வெளிப்படுத்துகின்றது. மாகாண அரசு ஒருதுளி நீரும் விரயமாகாது கடலுடன், ஏரியுடன் கலப்பதை தவிர்க்க கால்வாய், அணை என்பவற்றை அமைக்க வேண்டும்.

இரணை மடுக்குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நன்னீரை குடிப்பதற்கு கொண்டு செல்வதற்கு வடமாகாண அரசும் மத்திய அரசும்இணைந்து இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த முயற்சி செய்கின்றது.

இது வரவேற்கப்பட வேண்டிய மகிழ்ச்சிகரமான தேவையான திட்டம். திட்டம் சரியானதாக அமைந்தாலும் அதன் பின்புலத்தில் இது எவ்வளது தூரம் நீடிக்கும் எவ்வளவு காலத்திற்கு நீரை வழங்க முடியும் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

முதலில் தாயாக கருத வேண்டி பூமி வன்னிநிலம் எமக்கு சோற்றைத் தரும் பூமி எமது மாகாணத்தில் பொருளாதார மையம் அங்கு மூன்று போகம் நெல் விளையுமானால் எமக்கு அரிசிப் பிரச்சினை இல்லாமல் போய்விடும். ஆனால் அதற்கு



அங்கு போதுமான நீர் இன்மையினால் பலர் நெற்செய்கையை மேற்கொள்ள முடியாமல் உள்ளது. பருவகாலத்தை மட்டுமே நம்பியுள்ள நாம் இரணைமடு குளம நிரம்பும் போது மட்டுமே நீரை வெளியே எடுக்க முடியும் . மும்மாரி என்பது அந்தக காலம்தான் இப்போது ஒரு மாரி பெய்வது கேள்விக்குறியாகியுள்ள கலிகாலம்.

ஆகவே பலகோடி ரூபாய்த் திட்டம் மாகாண அரசை. மத்திய அமைச்சர்களை மட்டுமே திருப்திப்படுத்துவதாக மட்டுமே அமையலாம். நீர் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டுமாயின் குளநீர் மட்டம பேணப்பட வேண்டும். அதைப் பேணுவதற்கு ஏது வழி. இதை ஏன் யாரும் சிந்திக்கவில்லை. ஒன்றைக் கொடுத்துத்தான் ஒன்றைப் பெற முடியும் இரணைமடுக்குளம் ஊற்றோ அல்லது எடுக்க எடுக்க குறையாத அட்சய பாத்திரமோ அல்ல. அதற்கு ஓர் வழங்க வேண்டும். அது இருக்கிறது அதை நாம் கேட்கவில்லை. அநுராதபுரம் வர்ரை வந்துள்ள மகாவலி நீரை கடலுடன் கலக்க விடாது மதவளர்ச்சி வவுனியா ஊடாக திசை திருப்தி சில குளங்களை நிரப்பி இரணை மடுவரை கொண்டுவர முடியும்.

ஆகவே இரணைமடுக் குளத்திற்கு நீர் வழங்கியாக மகாவலிகங்கை திட்டத்தை மாகாண அரசும் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

இரண்டு திட்டங்களும் ஒரே நேரத்தில் நடைபெற வழி செய்ய வேண்டும் மகாவலிகங்கைத் திட்டமும், யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் திட்டமும் ஒரேநேரம் நடைபெற வெளிநாட்டு உதவி, உள்நாட்டு உதவி என பலருடன் கதைத்து ஒரே காலம் திட்டங்கள் நடைபெற வேண்டும்.

ஆகவே பருவகாலத்தில் மட்டும் நடைபெறும் நீர் விநியோகம் சில மாதங்களே கிடைக்கும் மற்றைய காலத்தில் காற்று ஓடுவதற்கு செய்யப்பட்ட பல கோடி ரூபாய் திட்டமாகிவிடும். பொருளாதாரத்தை சீரழிக்கும் நடவடிக்கை தன் மூலம் தவிர்க்கப்படும் இதை சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்கட்டும் நல்லதே நடக்கட்டும்.

# திவிநெகும செயற்றிட்டம் முன்னேற்றம் பற்றி ஆராய்வு




(கொழும்பு)

திவிநெகும செயற்றிட்டம் தொடர்பான மாதாந்த முன்னேற்றம் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் மேற்படி திணைக்களம் ஊடாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட மாமரக் கன்றுகள் தொடர்பாகவும் மற்றும் வாழ் வாதார முயற்சிக்கான ஊக்கு விப்பு கொடுப்பனவுகள் குறித்தும் இப்போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக களநிலவரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்தும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

வறுமையில் வாழும் கிராமப் புறமக்களின் வறுமையை இல்லாது ஒழிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இச் செயற்றிட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளன.

இச்செயற்றிட்டத்தை தொடர்ந்தும், முன்னெடுத்துச் செல்லவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# சேவை நலன் பாராட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அதிபர் சங்கத்தினால் இளைப்பாறிச் சென்று, பதவி உயர்வு பெற்றுச் சென்ற மற்றும் மற்றலாகிச் சென்ற அதிபர்களுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை கௌரவிப்பு நிகழ்வு ஒன்று சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நடைபெற்றது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அவர்களைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் நினைவுச் சின்னங்களையும் அவர்களுக்கு விளங்கி வைத்தார். (11,ர)

# பொலிஸ் அதிகாரிக்கு திடீர் இடமாற்றம்

பயாகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

செயற்றிறன் அற்ற நிருவாகத்தை முன்னெடுத்ததால் அவர் பொலிஸ் தலைமையகத்திற்கு நேற்று முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியடசகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

பத்தாயிரம் ரூபா இலஞ்சம் பெற்றமை தொடர்பாக பயாகல பொலிஸ் நிலையத்தின் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த சம்பவத்தை அடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது





நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்கசபை பாலர் பாடசாலையின் கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் அிண்மையில் நடைபெற்ற போது விருந்தினர்கள் அழைத துவரப்படுவதையும் விருந்தினர் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (18)

# காங்கிரஸ்கட்சியின் சரிவை
# ராகுல் காந்தியால் தடுக்க முடியாது



ராலேகன் சித்தி: "மக்களவைத் தேர்தல் தோல்வியில் இருந்து காங்கிரசை ராகுல் காந்தியால் காப்பாற்ற முடியாது" என்று பிரபல சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே கூறினார். மகாராஷ்டிராவில் உள்ள தனது சொந்த ஊரான ராலேகன் சித்தியில் நேற்று அவர் அளித்த பேட்டி ஜன்லோக்பால் மசோதாவுக்கு காங்கிரசார் ஒப்புதல் அளித்து இருக்கிறார்கள். பிற நடவடிக்கைகள் பற்றியும் பேசுகிறார்கள். ஆனால், இவையெல்லாம் காங்கிரசுக்கு உதவ போவதில்லை. ஜன் லோக்பால் மசோதாவை ராகுல் காந்தி ஆதரித்ததற்காக அவருக்கு நன்றி. ஆனால், சமீபத்தில் நடந்த மாநில சட்டப்பேரவை தேர்தல்களில் மக்களின் கோபத்துக்கு ஆளான பிறகு தான் காங்கிரஸ் இந்த நடவடிக்கையை எடுத்தது.

தோல்வியைச்சந்தித்த பிறகு தான் ஊழல் பிரச்சினையில் கவனம் செலுத்த தொடங்கியது. ஆனால், இப்போது காலம் தாழ்ந்து விட்டது. மக்களவை தேர்தல் தோல்வியில் இருந்து காங்கிரசை ராகுலால் காப்பாற்ற முடியாது. ராகுல் காந்தியும் காங்கிரசும் இன்னும் வலுவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இனி நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெற இருக்கிறது.

ஊழல் பிரச்சினையில் மக்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் காங்கிரஸ் அரசு கூடுதல் நடவடிக்கைகளை எடுத்தால் மட்டுமே மக்களவைத்தேர்தலில் அக்கட்சிக்கு ஆதரவு கிடைக்கும்.

2014 பெப்ரவரிக்குள் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் லோக்அயுக்தா ஏற்படுத்தப்படும் என்று ராகுல் உறுதி அளித்துள்ளார். ஆனால், மத்திய அரசு அதற்கு முன்பாக ஒவ்வொரு மாநிலத்திலும் வலுவான லோக்அயுக்தா அமைப்பதற்கான மசோதா கொண்டுவர வேண்டும் என ஹசாரே கூறினார்.

# பலவீனமடைகிறதா? காதல் சின்னம் தாஜ்மஹால்



(ஆக்ரா)

உலகப் புகழ்பெற்ற, காதல் சின்னங்களில் ஒன்றான, தாஜ்மகாலின் பிரதான நுழைவாயிலின் மேற்கூரை, பலவீனமடைந்துள்ளது.

தாஜ்மகாலின் முக்கிய நுழைவாயிலான, ராயல் பேட்டை, ஸாஜஹான் கட்டியதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இதைச் சீரமைக்கும் பணி, கடந்த 2003இல் நடந்தது, அப்போது, கட்டடத்தின் தென் பகுதியில் நீர்க்கசிவால், நுழைவாயில் சுவரில் உள்ள கற்கள் பெயர்ந்து விழுந்தன. இந்நிலையில், மீண்டும், இந்த நுழைவாயிலின் வடக்குப் பகுதியில் உள்ள, சிவப்பு கற்களின் மேற்பூச்சு பெயர்ந்து விழத் ஆரம்பித்துள்ளது. இதையடுத்து, இந்த நுழைவாயிலை ஆய்வு செய்த, தொல்லியல் துறை ஆய்வாளர்கள், நுழைவாயிலின் மேற்கூரை வரை, நீர்க்கசிவு இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். புனரமைப்புப் பணியை, தொல்லியல் ஆய்வாளர்கள் ஆரம்பித்துள்ளனர் இப்பணிகள் முடிவதற்கு, நான்கைந்து மாதங்கள் ஆகும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலகச் செய்திகள்

# கட்டித் தழுவ மறுத்த காதலனை கத்தியால் குத்தினார் காதலி
## அமெரிக்காவில் விபரீதம்

(வோஷிங்டன்)

கட்டித் தழுவ மறுத்த காதலனை, கத்தியால் குத்திய காதலியை, அமெரிக்க பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவின், புளோரிடா மாகாணத்தைச் சேர்ந்தவர் வோனா ரம்ப் 31. இவர் தன் காதலன் வீட்டிற்கு சென்றார். அங்கு இரவு விருந்துக்குப் பின் இருவரும் மது அருந்தினர். வோனா காதலனின் பேச்சைக் கேட்காமல் அளவுக்கு அதிகமாக மது அருந்தினார். சிறிது நேரத்திற்குப் பின் இருவரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பின் காதலனை சமாதானம் செய்த வோனா அவரை கட்டித் தழுவச் சொன்னார். வோனா வின் நடவடிக்கைகளில் எரிச்சல் அடைந்த காதலர் அவரை கட்டித் தழுவ மறுத்துவிட்டார். இருவருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. கடும் கோபம் அடைந்த வோனா தன் காதலரை கத்தியால் குத்தினார். காதலரின் அலறல் சத்தம் கேட்ட அக்கம் பக்கத்தினர், அவரை உடனடியாக மருத்துவமனையில் அனுமதித்தனர். பொலிஸார் வோனாவை கைது செய்து பின் ஜாமினில் விடுதலை செய்தனர்.

# வெடித்தது துப்பாக்கிச்சமர் ஈராக்கில் 100 பேர் பலி



ஈராக்கில் அல் கய்தா தீவிரவாதிகளுடன் தொடர்புடைய பழங்குடி இனத்தவருக்கும் பொலிஸாருக்கும் இடையே நடந்த பயங்கரத் துப்பாக்கிச் சண்டையில் 100இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் பலியாயினர். ஈராக் தலைநகர் பாக்தாத் நகருக்கு மேற்கே அன்பர் மாகாணத்தில் உள்ளது ரமாதி மற்றும் பலுஜா நகரம். இந்நகரங்களில் 2003ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் முகாமிட்டு அல் கய்தா தீவிரவாதிகளை ஒடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஈராக்கில் ஷியா பிரிவினரின் ஆட்சிக்கு எதிராக சிறுபான்மை இனத்தவராக உள்ள சன்னி பிரிவினர் தொடர்ந்து வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, இந்நகரங்களில் தீவிர ரோந்து பணியில் பொலிஸார், இராணுவம், நேட்டோ படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ரமாதி மற்றும் பலுஜா ஆகிய இடங்களில் அல் கய்தாவுடன் தொடர்புடைய பழங்குடி இனத்தவர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்தது. இதில் 71 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். துப்பாக்கிச் சண்டையில் 32 அப்பாவி மக்களும் பலியாகி உள்ளனர். ரமாதி நகரில் 100இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் ரமாதி நகருக்குள் புகுந்து வார இறுதி நாளில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதில் 14 பேர் பலியானதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இளைஞர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சி நாட்டின் அபிவிருத்திக்கு உதவும்



(திருவனந்தபுரம்)

நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர்களுக்கு சிறந்த தொழில்நுட்ப பயிற்சி அளிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும் என்று திருவனந்தபுரத்தில் நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். பிரதமர் மன்மோகன்சிங் 3 நாள் சுற்றுப்பயணமாக கடந்த சனிக்கிழமை திருவனந்தபுரம் வந்தார். நேற்று முன்தினம் காலை திருவனந்தபுரம் கனகக்குன்னு அரணமனையில் நடந்த பி.என்.பணிக்கர் விஞ்ஞான் விகாஸ் மையத்தின் மின்னணு கல்வி திட்டத்தை தொடங்கி வைத்தார். அதன் பின் அவர் கழக்கூட்டம் டெக்னோ பார்க்கில் நடந்த டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்தின் படிப்பு மையத்திற்கான அடிக்கல் நாட்டினார்.

இதில் கவர்னர் நிகில்குமார், முதல்வர் உம்மன் சாண்டி, தொழில்துறை அமைச்சர் குஞ்ஞாலிகுட்டி மற்றும் பலர் கலந்து கொண்டனர். விழாவில் பிரதமர் பேசியதாவது

நமது நாடு மிக வேகமான வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. நாட்டின் வளர்ச்சிக்காக இளைஞர்களுக்கு சிறந்த தொழில்நுட்ப பயிற்சி அளிக்க வேண்டியது கட்டாயமாகும். இவ்வாறு பிரதமர் மன்மோகன் தெரிவித்துள்ளார்.

# இப்போதும் இவர்தான் முதல்தர பணக்காரன்



மைக்ரோசொப்ட் நிறுவனர் பில்கேட்ஸ், மீண்டும் உலகின், "நம்பர் 1" பணக்காரர் என்ற சிறப்பைப் பெற்றுள்ளார்.

புளூம்பெர்க் நிறுவனம், சென்ற, 2013ஆம் ஆண்டின், 300 பெரும் பணக்காரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில், பில்கேட்சின் சொத்து மதிப்பு, சென்ற ஆண்டு, 1,580 கோடி டாலர் அதிகரித்து, 7,850 கோடி டாலராக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்ற மே மாதம் வெளியான பட்டியலில், பில்கேட்ஸ், மெக்சிகன் தொழிலதிபர் கார்லோஸ் ஸ்லிம்மை பின்னுக்கு தள்ளி, உலகின் பெரும் பணக்காரர் என்ற இடத்தைப்பிடித்திருந்தார என்பது, குறிப்பிடத்தக்கது. சென்ற ஆண்டு, மைக்ரோசொப்ட் நிறுவன பங்கின் விலை, 40 சதவீதம் அதிகரித்ததன் மூலம், பில்கேட்ஸ் மேலும் கொழுத்த பணக்காரராக உயர்ந்துள்ளார். அது மட்டுமின்றி, இவர், வைத்துள்ள, 35 பொது மற்றும் தனியார் துறை நிறுவனப் பங்குகளின் விலை உயர்வாலும், சொத்து மதிப்பு அதிகரித்துள்ளது. பில்கேட்சின் மொத்தச்சொத்தில், அவர் மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் கொண்டுள்ள பங்குகளின் மதிப்பு, 25 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது.

# இன்னும் தணியாத சர்ச்சை முற்றுப்பெறாத முறுகல்

(வோஷிங்டன்)



அமெரிக்காவில், இந்திய தூதரக அதிகாரி, தேவயானி கைது செய்யப்பட்ட பின், அவரது ஆடைகளை கலைந்து, அமெரிக்க அதிகாரிகள் சோதனை செய்தது போன்ற வீடியோ காட்சிகள், அமெரிக்க சமூக வலைதளத்தில் வேகமாக பரவி வருகிறது. "இந்த வீடியோ காட்சிகள் பொய்யானவை" என, அமெரிக்கா மறுத்துள்ளது.

இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே, தேவயானி மீதான குற்றச்சாட்டுகளை திரும்பப் பெற வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ளது. இந்நிலையில், தேவயானி பற்றிய வீடியோ காட்சிகள், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த வீடியோ காட்சிப் பதிவுகள் பொய்யானவை என்றும் சித்தரிக்கப்பட்டவை எனவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து, அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி, மேரி ஹார்ப் கூறியதாவது சமூக வலைதளங்களில் வெளியாகியுள்ள, தேவயானி பற்றிய வீடியோ காட்சிப் பதிவுகள் பொய்யானவை. இதில் உண்மைத் தன்மை இல்லை. சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருவதன் மூலமே, இது சித்தரிக்கப்பட்டவை எனத்தெரிகிறது. அபாயகரமான இச்செயலை வேண்டுமென்றே விஷமிகள் பரப்பி வருகின்றனர். இது குறித்து உடனடியாக விசாரணை நடத்தபடும். இவ்வாறு அவர் கூறினார்.

# வறுமையிலும் கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



(பளை)

பளை வீமன்காமம் பகுதியைச் சேர்ந்த நூற்றி இருபத்து நான்கு முன்பள்ளி மற்றும் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுப் பகல் 1.30 மணியளவில் பளை வீமன்காமம் கிராம அலுவலர் பிரிவு கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் லயன்ஸ் எஸ்.சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

மானிப்பாய் நகர லயன்ஸ் கழகம் கிராம அபிவிருத்தி சங்கத்துடன் இணைந்து மேற்கொண்ட இந்நடவடிக்கைக்கான நிதியை சுவிஸ் நாட்டில் இருந்து வந்த லயன்ஸ் எஸ்.மகேந்திரன் மற்றும் அவருடைய பாரியார் திருமதி ம.விஜயகுமாரி வழங்கி இருந்தார்கள்.

மங்கள விளக்கினை லயன்ஸ் பிராந்திய ஆலோசகர் லயன்ஸ் வைத்திய கலாநிதி வி.தியாகராசா மாகாண பிரதி செயலாளர் லயன்ஸ் ஆர்.ஜெயபாலன் மானிப்பாய் நகர லயன்ஸ் கழகத்தலைவர் எஸ்.நாகையா செயலாளர் லயன்ஸ் எல்.ஜெயராஜ், அன்பளிப்பாளர்களான மகேந்திரன் தம்பதியினர் ஆகியோர் ஏற்றி வைத்தார்கள்.

# மீண்டும் இயங்குகிறது றோ.க. பாடசாலை

(யாழ்.நிருபர்)

ஊர்காவற்றுறை சுருவில் றோ.க.த.க பாடசாலை மீண்டும் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் ஸ்ரீசெல்வம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 28 வருடங்களாக மூடப்பட்டிருந்த இப்பாடசாலையை தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண்குயின்ரஸ் திறந்து வைத்தார்.

ஆரம்பப்பிரிவுடன் இயங்கவுள்ள இப்பாடசாலையில் கல்வி பயில்வதற்கு இப்பிரதேசத்தைச் சேர்ந்த 30 மாணவர்கள் இணைந்துள்ளனர்.

பாடசாலைக்குத் தேவையான குடிநீர் வசதிகள் மற்றும் மலசல கூட வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது. (10)

# வவுனியா கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம்

(யாழ்.நிருபர்)

வவுனியா நகரின் மத்தியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் வவுனியா கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும். 16 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

மகோற்சவகால கிரியைகளை சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ பாலச்சந்திரக் குருக்கள் ஆகியோர் நடத்துவர்.

தினமும் நிருத்திய நிகேதன் நுண்கலைக் கல்லூரி மாணவர்களின் நடன நிகழ்வுகள் இடம்பெறும். உற்சவ காலங்களில் தினமும் பகல் அன்னதானமும் இடம்பெறும். (10)

## தமிழ்நாட்டு...

இலங்கை - இந்திய மீனவர்கள் இடையிலான பேச்சுவார்த்தைக்காக இலங்கைத் தரப்பினருக்கு இன்னும் உத்தியோகபூர்வமான அழைப்புக் கிடைக்கவில்லை என்றும் அந்தோனிமுத்து கூறினார்.

எனினும் தமிழகம் சென்று பேச்சுவார்த்தை நடத்துவதற்கான மீனவர் பிரதிநிதிகள் குழுவினரை இலங்கை மீன்பிடித்துறை அமைச்சு ஏற்பாடு செய்துள்ளதாகவும் இந்திய - இலங்கை மீனவர்கள் சங்க அமைப்பின் இலங்கை இணைப்பாளர் தெரிவித்தார்.

டில்லியில் தமிழக மீனவர்கள் இலங்கை அமைச்சரை சந்திப்பதற்கான திகதி இன்னும் குறிக்கப்படவில்லை என்றபோதிலும், இந்தச் சந்திப்பு நிச்சயம் நடப்பதற்கான ஏற்பாடுகள் நடந்துள்ளது.

அமைச்சர் ராஜித சேனாரத்ன அடுத்த வாரம் இந்தியா செல்வார் என்றும் இலங்கை மீன்பிடித்துறை அமைச்சின் ஆலோசகர் தமிழோசையிடம் கூறினார்.

இதனிடையே, இலங்கையிலிருந்து இந்தியா செல்ல ஏற்பாடாகியுள்ள இலங்கை மீனவர் பிரதிநிதிகள் 15 பேரில் 10 பேர் வரை வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மீனவர் பிரதிநிதிகள் இந்தக் குழுவில் இடம்பெறவில்லை என்று அண்மையில் வெளியாகியிருந்த செய்திகளில் உண்மை இல்லை என்று மீன்பிடித்துறை அமைச்சு அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளமையை அவர் சுட்டிக்காட்டினார்.

## வடக்கில் சீரற்ற...

மக்களுக்கு நேற்றைய தினம் அறிவித்தனர். சீரற்ற கால நிலையால் கடல் அலை மூன்று மீற்றர் வரை உயரக்கூடுமெனவும், மழை பெய்யக்கூடுமெனவும் இந்த ஆபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளவே மக்களுக்கான அறிவித்தல் விடப்பட்டது.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் கல்லாறு கடற்கரை மக்களையும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 4 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த கடற்கரையோர மக்களையும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் கிளாலி கடற்கரையோர மக்களையும் கரையோரத்திலிருந்து விலகியிருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அதேபோன்று முல்லைத்தீவிலும் இவ் அறிவித்தல் வழங்கப்பட்டதாகவும், கள்ளப்பாட்டிலிருந்து 12 குடும்பங்கள் இடம்பெயர்ந்து அப்பகுதி பாடசாலையொன்றில் தங்கியிருப்பதாகவும் மாவட்ட அரச அதிபர் வேதநாயகன் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் நேற்றைய தினம் பலத்த மழை பெய்துள்ளது.

வடக்கின் கடற்பரப்பு நேற்றைய தினம் கொந்தளிப்பாக காணப்பட்டதுடன், மீன்பிடிப்பதற்காக பெருமளவானவர்கள் கடலுக்கு செல்வதும் தவிர்க்கப்பட்டுள்ளது. (40,125)

## யாழ். மக்களை...

நேற்று முன்தினம் இரவு மூவர் அச்சுவேலிப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தக் குழுவைச் சேர்ந்த மேலும் மூன்று பேரை கோப்பாய்ப் பொலிஸார் கைதுசெய்தனர். இவர்களில் குழுத் தலைவனான ஆவா என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இணுவில் பகுதியில் தந்தை, மகன் மீதான தாக்குதலில் தந்தை படுகாயமடைந்து மகன் உயிரிழந்த சம்பவம் மற்றும் கடந்த இரண்டாம் திகதி அச்சுவேலி செல்வபுரம் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவம், அதில் காயமடைந்தவர்களை ஏற்றிவந்த வாகனம் அடித்து சேதமாக்கப்பட்டமை உட்பட மற்றும் பல வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்பென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று ஆனைக்கோட்டையில் ரோந்து சென்ற பொலிஸார் மீதான் தாக்குதல் சம்பவத்துடன் இவர்களுக்கு தொடர்பிருக்கலாம் என நாம் சந்தேகமடைந்துள்ளோம். இவர்கள் மீதான விசாரணையை மூன்று விசேட பொலிஸ் குழுக்கள் மேற கொண்டு வருகின்றன.

எனவே இவர்களுடன் தொடர்புடைய மேலும் பலர் கைது செய்யப்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

இவர்களிடமிருந்து ஐந்துக்கும் மேற்பட்ட மோட்டார்சைக்கிள்கள், பல வாள்கள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. விசாரணைகளைத் தொடர்ந்து நாளைய தினம் இவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்களென அவர் மேலும தெரிவித்தார்.

## முல்லை...

மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கன் வேதநாயகன் தெரிவித்தார். வடபகுதியில் நிலவுகின்ற சீரற்ற காலநிலையை அறியாமல் இவர்கள் கடலுக்குச் சென்றிருக்கலாம் எனவும் இதனாலேயே இவர்களின் படகு காற்றில் சிக்கியிருக்கலாம் எனவும் அவர் கூறினார். இவர்களிடம் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாணவர்களின்...

ஆனால் அமைச்சர் சாத்தியமாகும் வாக்குறுதிகளை மக்களிடம் வழங்கி மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு அவற்றை நிறைவேற்றியும் வருகின்றார்.

இந்நிலையில் இணக்க அரசியல் ஊடாகவே தமிழ் மக்களுக்கு பல்வேறு அபிவிருத்தி உள்ளிட்ட அரசியலுரிமையையும், ஏனைய உரிமைகளையும் வென்றெடுக்க முடியும். அது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மட்டுமே சாத்தியமாகும். அந்தவகை யில் தமிழ் மக்களின் முயற்சிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் அமைச்சர் தொடர்ச்சியாக அயராது அளப்பரிய சேவையாற்றி வருகின்றார் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது அமைச்சர் கருத்துரையாற்றுகையில்,

யாழ். மாவட்டம் மட்டுமல்லாது வடக்கு மாகாண பாடசாலை மாணவர்கள் அனைவரையும் கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டிலும் பங்கெடுக்கச் செய்து அவர்கள் ஆரோக்கியமுள்ள சமூகமாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதற்கு அனைத்து உடற்கல்வி ஆசிரியர்களும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இதன்போது வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசில் வழங்கி கௌரவித்தனர்.

இதில் வடக்கு மாகாண கல்வி அபிவிருத்திக்குழுத் தலைவர் இரா. செல்வவடிவேல், அமைச்சரின் யாழ். மாவட்ட இணைப்பாளர் கே.வி.குகேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## மாகாணசபையை...

மக்களது சுயநிர்ணய கோரிக்கையையும் முன்னெடுக்க வேண்டும். ஆனால், இவை இரண்டினையும் வெவ்வேறாக அணுகுதல் அவசியமாகும்.

இவற்றினை முழுமையாக அடைந்து கொள்வதற்கு மாகாண சபையும் அரசும் இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டும். மாகாண சபை என்பது மத்திய அரசின் கீழான ஒரு விடயம் என்பதால் நாம் அனைத்தையும் தனித்துச் செய்து விடமுடியாது. ஆகவே பரஸ்பர புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்புகளுடன் காரியங்கள் ஆற்றப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம், கடந்த வடமாகாண சபைத் தேர்தலில் மக்களுக்கு அபரிமிதமான வாக்குறுதிகளை வழங்கி விட்டோம். இருப்பினும் மாகாண சபை ஊடாக அனைத்தையும் செய்ய முடியாது என்ற கருத்தினையும் வெளியிட்டிருந்தோம். ஆனால் நாம் அனைத்தினையும் செய்வோம் என்றே வடபுல தமிழ மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் ஆதரித்தமைக்கான காரணங்களாக இரண்டினைக் கூறமுடியும். அவர்கள் தங்கள் சுய உரிமைக் கோரிக்கையை வெளிக்காட்டியமை, தங்களது வாழ்வாதார பிரச்சினைக்கான தீர்வை வேண்டி நிற்பது ஆகியனவே இவை.

மேலும் இதுவரை காலமும் செயற்படாதிருந்த ஒரு கட்டமைப்பான வடமாகாண சபையை இயக்குவதிலும் நாம் சவால்களை எதிர்நோக்கியுள்ளோம். வடக்கில் கடமையாற்றும் அரச அதிகாரிகளில் பெரும்பாலானோர் இதுவரை காலமும் ஆளுநரின் கீழே செயற்பட்டு வந்ததனால் அவர்கள் மாகாண சபையின் கீழ் பணியாற்றுவதிலும் சிக்கலான நிலைமைகளை எதிர்கொண்டுள்ளனர். இது அவர்களின் தவறல்ல என்றும் சித்தார்த்தன் தெரிவித்தார்.

## போரை நிறுத்த...

ஒப்புக்கொள்ளவில்லை. போரை நிறுத்தச் சொல்லி பிரபாகரனிடம் இந்திய அரசாங்கம் எவ்வளவு சொல்லியும் கடைசிவரை அவர் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. அதனால் தான் அவர் மரணமடைய நேரிட்டது. இந்தியா சொன்னதைக் கேட்டிருந்தால் இன்றைக்கு பிரபா கரன் உயிரோடு இருந்திருப்பார் என்று சிதம்பரம் கூறியுள்ளார்.

மீனவர்கள் பிரச்சினையில் உள்ள சிக்கல்களை தீர்க்கவும், இருதரப்பு மீனவர்களையும் அழைத்துப் பேசவும் இந்திய அரசு தயாராகவே உள்ளது. ஆனால் தமிழக அரசு அதற்கு தயாராகவில்லை. அதற்கான திகதியை இன்னமும் குறிப்பிடவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் விசாரணை முடிந்து தண்டனையும் வழங்கப்பட்டு விட்டது. விசாரிக்கப்பட வேண்டியவர்கள் இன்னமும் இருக்கிறார்களா? என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த சிதம்பரம்,

தற்போதைக்கு நிலவும் கருத்துக்கள் வாக்குமூலங்கள் அல்ல. பிற்காலத்தில் எழுந்த சிந்தனைகள். அவர்கள்தான் வழக்கைத் தொடர்ந்தார்கள். கார்த்திகேயன்தான் கருத்துச் சொல்ல வேண்டும். என்னால் கருத்துச் சொல்ல முடியாது என்றார்.

விசாரணையில், தீர்ப்பில், சந்தேகம் உள்ளது என்ற பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மனுத் தாக்கல் செய்து மறு விசாரணை நடத்தக் கோர வேணடும். நிரபராதி என்று வரும் பட்சத்தில் அதை அரசு ஏற்றுக்கொள்ளும். அதற்காகத்தான் குற்றம் சாட்டப்பட்டவர்களின் தூக்குத்தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சிதம்பரம் மேலும் கூறியுள்ளார்.

# தெளிவான கொள்கையின் கீழ் வடக்கு, கிழக்கில் வீடமைப்பு

## இந்தியா உறுதியளிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடம் பெயர்ந்த மக்களுக்கான வீடமைப்புத் திட்டத்தில் முழுமையான தெளிவுத்தன்மை பேணப்படும் என்று இந்தியா உறுதியளித்துள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் இது தொடர்பில் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. அதில், 2013 ஆம் ஆண்டு 10,000 பயனாளிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இரண்டாம் கட்ட நிர்மாணிப்புகளில் 43 ஆயிரம் வீடுகள் உள்ளடங்குகின்றன. வடக்கில் 2013 ஆம் ஆண்டு 10, 184 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் 1832, கிளிநொச்சியில் 3090, முல்லைத்தீவில் 3540, மன்னாரில் 1074, வவுனியாவில் 648 வீடுகள் அமைக்கப்பட்டன. கிழக்கின் மட்டக்களப்பில் 66 வீடுகள் கட்டப்பட்டன. 100 வீடுகள் 355 கோடி ரூபாய்கள் செலவில் திருத்தப்பட்டன.

இந்தநிலையில் இந்திய அரசாங்கம் இடம்பெயர்ந்தவர்களுக்கான வீடமைப்பு திட்டத்துக்காக 1, 372 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகரம் குறிப்பிட்டுள்ளது.

# இனவாத அடிப்படையில் செயற்படுகிறார் றிசாத்

## போர்க்கொடி தூக்கும் ஹெல உறுமய

அமைச்சர் றிசாட் பதியுதீன் இனவாத அடிப்படையில் செயற்பட்டு வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. அமைச்சர் பதியுதீன் அண்மையில் முஸ்லிம் மக்களுக்கு வீடமைப்பு திட்டமொன்றை முன்னெடுக்க உதவிகளை வழங்குமாறு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பிடம் கோரியிருந்தார்.

இராஜதந்திர விதிகளை மீறி அமைச்சர் பதியுதீன் உதவிகளைக் கோரியதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்துள்ளார். 2009 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு புறம்பான வகையில் அமைச்சர் உதவி கோரியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

2009 ஆம் ஆண்டில் சுனாமி வீடமைப்பு திட்டமொன்றுக்கு சவுதி அரேபியாவிடம் உதவி கோரிய போது (சுனாமியின் போது இருப்பிடங்களை இழந்த முஸ்லிம்களுக்காக சவுதி அரேபியா அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள்) அதற்கு எதிராக ஜாதிக ஹெல உறுமய கட்சி நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தது.

தீகவாபியில் முஸ்லிம்களுக்கு வீடமைப்புத்திட்டமொன்றை அமைத்துக்கொடுக்க சவுதி அரேபியாவிடம் உதவி கோரியமை சட்ட விரோதமானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

ஒரு இன சமூகத்திற்கு நன்மை ஏற்படக்கூடியவகையில் மட்டும் சர்வதேச உதவிகளைப் பெற்றுக்கொள்வது சட்டவிரோதமானது என நீதிமன்றம் அறிவித்திருந்தது. அமைச்சர் றிசாட் பதியுதீன் இன அடிப்படையில் மட்டும் உதவிகளை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாகவும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

பிரதமர் டி.எம். ஜயரட்னவின் ஊடாக அமைச்சர் பதியுதீன், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பிற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜே.வி.பி. கட்சியும் தெரிவித்துள்ளது.

# வங்கியில் கொள்ளைச்சம்பவம்; இராணுவ கப்டனுக்கு தண்டனை

(கொழும்பு)

வங்கிக் கொள்ளைச் சம்பவமொன்றில் ஈடுபட்ட இராணுவ கப்டன் ஒருவருக்கு இராணுவ நீதிமன்றினால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் குறித்த இராணுவக் கப்டன், முஸ்லிம் பெண் ஒருவரைப் போன்று வேடமிட்டு கண்டி மஹய்யாவ, தேசிய சேமிப்பு வங்கிக்கிளையொன்றில் கொள்ளையடித்துள்ளார்.

குறித்த இராணுவக் கப்டன் சேவையிலிருந்து நீக்கப்பட்டதுடன், இரண்டாண்டு கால கடுழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. இராணுவ சுயேட்சைப் பிரிவு கப்டன் ஏ.ம்.யு. சமரக்கோன் என்பவருக்கு எதிராகவே இராணுவ நீதிமன்றம் இந்தத் தண்டனையை விதித்துள்ளது.

இவரது செயல் இராணுவத்தை இழிவு படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# காணாமற்போன சிறுமி தாயாரிடம் சேர்ந்தார்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்திலிருந்து வலந்தலைச் சந்திக்கு நேற்றுக்காலை இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்வண்டியில் பயணித்த 12 வயதுச்சிறுமி. காணாமற்போன நிலையில் மீண்டும் மாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி நேற்றுக்காலை 7.40 மணிக்கு சுன்னாகத்தில் உள்ள அத்தை வீட்டிலிருந்து தந்தையாரிடம் வலந்தலைச் சந்திவரை பஸ்ஸில் பயணம்செய்த நிலையில் சிறுமி காணாமற்போன நிலையில் உறவினர்களால் தேடப்பட்டு, ஊர்காவற்றுறை பொலிஸாரிடமும் முறையிடப்பட்டது.

பின்னர் மாலை சிறுமி கண்டுபிடிக்கப்பட்டார். தகராறால் பிரிந்துவாழும் சிறுமியின் குடும்பத்தில் தாயார் தனித்து சுன்னாகத்தில் வாழ்கின்றார். பிரஸ்தப சிறுமி வலந்தலைச் சந்திக்கு வந்து இறங்கி பின்னர் மீண்டும் சுன்னாகம் சென்று தாயாரிடம் சேர்ந்துள்ளார். இச்சம்பவம் குறித்து தாயாரிடம் விசாரித்தபோது சிறுமி அங்கு உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. இச்சம்பவத்தால் வலந்தலைப்பகுதியில் நேற்றுப் பெரும் பரபரப்பு எற்பட்டிருந்தது.

# அறிவற்ற கல்வியமைச்சர் தேசிய சுதந்திர முன்னணி சாடல்

கல்வியறிவு அற்றவர் ஒருவர் நாட்டில் கல்வி அமைச்சராக பதவி வகிக்கின்றார் என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது. புலமைப் பரிசில் பரீட்சை இரத்து செய்யப்படும் என்ற கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவின் கருத்து முட்டாள்தனமானது என தேசிய சுதந்திர முன்னணியின் அரசியல் பீட உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டுடன் புலமைப் பரிசில் பரீட்சை இரத்து செய்யப்படும் என்ற அமைச்சர் பந்துலவின் கருத்து நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியது. அமைச்சரவையின் கருத்தை அறிந்து கொள்ளாது பந்துல தன்னிச்சையாக தீர்மானம் எடுத்துள்ளார். உறங்கிக் கொண்டிருந்தவர் கனவில் உளறுவதனைப் போன்று கல்வி அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார். பிள்ளைகள், பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து கல்விச் சமூகத்தையும் பந்துல அச்சுறுத்தியுள்ளார். நாட்டின் கல்வி அமைச்சர் என்ற ரீதியில் பந்துல குணவர்தன இதனை விடவும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும் என பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

# சீரற்ற காலநிலையால் மூடப்பட்டது கசூரினா

வடக்கில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையை அடுத்து காரைநகர் கசூரினா கடற்கரைக்கு சுற்றுலாப்பயணிகள் செல்வதற்கு பொலிஸார் தடைவிதித்துள்ளனர்.

நேற்றுக்காலை முதல் இப்பகுதியில் கடலில் இருந்து சுமார் 250 மீற்றர் தொலைவில் வீதித்தடைகள் போடப்பட்டு சுற்றுலா பயணிகள் கடற்கரைக்கு செல்வதற்கு பொலிஸார் தடைவிதித்ததுடன் காரைநகர் பகுதிகளில் ஊர்காவற்றுறைப்பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் காலநிலை குறித்த எச்சரிக்கை அறிவிப்பை நேற்று தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தனர். (50)

# பிரதமருக்கு எதிராக எம்பிலிப்பிட்டியவில் பேரணி

பிரதமர் டி.எம்.ஜயரத்னவுக்கு எதிராக எம்பிலிப்பிட்டிய நகரில் நேற்றுக் காலை பேரணி ஒன்று இடம்பெற்றது.

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தலைமையில் பிரதமருக்கு எதிராக இடம்பெற்ற இந்த எதிர்ப்பு பேரணி எம்பிலிப்பிட்டிய ரஜமகா விகாரையில் நேற்றுக் காலை 8 மணியளவில் ஆரம்பமாகி நகர் ஊடாகச் சென்றது.

பேரணியில் ஈடுபட்டவர்கள் கறுப்புக் கொடிகளை ஏந்தி தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தினர்.

# பறவைக்காய்ச்சலில் இலங்கையும் உள்ளடக்கம்

(கொழும்பு)

பறவைக் காய்ச்சல் ஆபத்து கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது.

பூகோள மாசுபடுதலும் புலம்பெயர் பறவைகளுக்கு இலங்கை ஒரு தளமாகவிளங்குவதும் இதற்கு காரணமென கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்க நிறுவனமொன்று ஐந்து வருடத்திற்கு இன்புளுவென்சா மற்றும் பறவைக் காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை நடத்துவதற்காக சுகாதார அமைச்சிற்கு 852.050 அமெரிக்க டொலரினை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# தேசிய அடையாள அட்டைகளின் இலக்கங்களில் குளறுபடிகள்

## ஆட்பதிவுத் திணைக்களம் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை இலக்கங்களில் குளறுபடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 150,000 தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் போலியானவை எனத் தெரிவிக்கப்படுகிறது. ஒரே விதமான இலக்கங்கள் ஒன்றுக்கு மேல் பதிவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது, இதனால் தேசிய அடையாள அட்டைகளை பயன்படுத்துவதில் பாரிய சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆட்பதிவுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தவறுகளே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது. இவ்வாறான பிழைகள் இடம்பெற்றிருந்தால் முழுப் பொறுப்பினையும் ஏற்றுக் கொள்வதாகவும் விரைவில் அந்தப் பிழைகளை திருத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேசிய ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஆர்.எம்.எஸ். சரத்குமார தெரிவித்துள்ளார்.

கணனி முறைமை அறிமுகப்படுத்தப்படாமையினால் இவ்வாறான மனிதத் தவறுகள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். வங்கிகளில் கடன்களைப் பெற்றுக் கொள்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# அரச வைத்தியசாலைகளில் திடீர் சுற்றிவளைப்புக்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அரச வைத்தியசாலைகளில் திடீர் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

மாதத்திற்கு 3 சுற்றிவளைப்புக்களையேனும் மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் மக்களுக்கு தரமான சேவை கிடைக்கின்றதா என்பதைக் கண்டறிவதே இதன் நோக்கம் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் விசேட சுற்றிவளைப்புப் பிரிவின் அதிகாரிகளை இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் உள்ள வாகனங்களின் பயண விபரம் பதிவு செய்யப்படுகின்றமை குறித்து விசேட கவனம் செலுத்துமாறும் சுகாதார அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

# கைதிகளின் சம்பளம் அடுத்தமாதம் அதிகரிப்பு

(கொழும்பு)

கைதிகளுக்கு வழங்கப்படும் சம்பளத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் அதிகரிப்பதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாளொன்றுக்கு ஒரு ரூபா சம்பளம் பெறும் கைதிக்கு 60 ரூபாவும், 1 ரூபாய் 50 சதம் பெறும் கைதிக்கு 75 ரூபாவும், 2 ரூபாய் 50 சதம் பெறும் கைதிக்கு 100 ரூபாவும் வழங்கப்படும் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம தெரிவித்தார்.

தச்சன், மேசன், பேக்கரி, அச்சு இயந்திரம் மற்றும் சவர்க்கார உற்பத்தி ஆகிய தொழில்களில் ஈடுபடுகின்றவர்களுக்கே சம்பளம் வழங்கப்படுகின்றது. அவ்வாறானவர்கள் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.